بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

**வார இதழ் - காதியான்**

**Weekly BADAR Qadian Tamil**

தொகுதி 9 | இதழ் 38

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1445 - ரபீயுல் அவ்வல் 15 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - தபூக் 19 ★ செப்டம்பர் 19 2024

## அல்லாஹ்வின் கட்டளை

قُلۡ لِّعِبَادِیَ الَّذِیۡنَ اٰمَنُوۡا یُقِیۡمُوا الصَّلٰوۃَ وَیُنۡفِقُوۡا مِمَّا رَزَقۡنٰہُمۡ سِرًّا وَّعَلَانِیَۃً مِّنۡ قَبۡلِ اَنۡ یَّاۡتِیَ یَوۡمٌ لَّا بَیۡعٌ فِیۡہِ وَلَا خِلٰلٌ ○

(தூதரே!) நீர் நம்பிக்கை கொண்டுள்ள என் அடியார்களிடம் எவ்விதமான கொடுக்கல், வாங்கலும் இல்லாத மேலும் எத்தகு நெருங்கிய நட்பும் இல்லாத நாள் வருவதற்கு முன்னர், அவர்கள் தொழுகையினைச் சிறந்த முறையினில் நிறைவேற்றி வருமாறும் நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் (நம்முடைய வழியில்) செலவு செய்து வருமாறும் கூறுவீராக!

( இப்ராஹீம்; 32)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், மேலும், அவர்களுக்கு மிகவும் பணி செய்யக்கூடிய நீண்ட ஆயுள் கிடைப்பதற்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக!

## அல்லாஹ் எமது ஜமாஅத்தையும் ஸஹாபிகளின் அருட்கொடைகளிலிருந்து பயன் பெறச் செய்ய வேண்டும்; ஸஹாபிகளிடம் இருந்த அந்த உண்மையும் நன்றியுணர்வும் கட்டுப்படுதலும் அவர்களிடத்திலும் உருவாக வேண்டுமே என்ற வேதனையில் எப்போதும் உள்ளம் மூழ்கிக் கிடக்கின்றது

## அவர்கள் இறைவனைத் தவிர வேறு எவருக்கும் அஞ்சக் கூடியவர்களாக இருக்கக் கூடாது; அவர்கள் இறையச்சமுடையவர்களாக இருக்க வேண்டும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### ஸஹாபா பெருமக்களின் தன்மையை உருவாக்கிக் கொள்ளுங்கள்

ஸஹாபா பெருமக்களின் நிலையைப் பாருங்கள்! அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் தோழமையில் வசிப்பதற்காக என்னனென்னவெல்லாம் செய்தார்கள்! அந்த ஸஹாபா பெருமக்கள் என்னவெல்லாம் செய்தார்களோ அதேபோன்று எமது ஜமாஅத்தின் மீதும் இந்த விஷயம் கடமையாகும். அதாவது அதே வடிவத்தை தம்முள் அவர்கள் உருவாக்க வேண்டும். அதுவன்றி நான் என்ன நோக்கத்திற்காக அனுப்பப்பட்டுள்ளேனோ அந்த அசல் பொருளை அவர்களால் பெற முடியாது. ஸஹாபா பெருமக்களுக்கு இருந்திராத அதிக தேவைகளையும், வசதி வாய்ப்புகளையும் விட எமது ஜமாஅத்தினருக்கு அதிகம் இருக்கின்றதா? அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் தொழுவதற்காகவும், அன்னரின் விஷயங்களைக் கேட்பதற்காகவும் எந்த அளவிற்கு ஏக்கமுடையவர்களாக இருந்தார்கள் என்பதை நீங்கள் பார்ப்பதில்லையா?

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உடன் இருக்கின்ற இந்த ஜமாஅத்திற்கு அல்லாஹ் இந்த அந்தஸ்தை வழங்கியிருக்கிறான். அதாவது அந்த ஜமாஅத் ஸஹாபா பெருமக்களுடன் இணையக் கூடிய ஜமாஅத் ஆகும்.

وَاٰخَرِیۡنَ مِنۡہُمۡ لَمَّا یَلۡحَقُوۡا بِہِمۡ

(அல்ஜுமுஆ : 4)

இது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத் ஆகும் என்பதை திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உடன் அல்ல ; மாறாக உண்மையில் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடனே இருக்கும். ஏனெனில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அன்னாருடைய ஓர் அழகிலேயே தோன்றுவார் ; மேலும், தூதுச் செய்தியை பரப்புதலை முழுமை செய்யக் கூடிய பணிக்காக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். அல்லாஹ் எமது ஜமாஅத்தையும் ஸஹாபிகளின் அருட்கொடைகளிலிருந்து பயன் பெறச் செய்ய வேண்டும்; அவர்களிடத்தில் ஸஹாபிகளிடம் இருந்த அந்த உண்மையும், நன்றியுணர்வும், கட்டுப்படுதலும் உருவாக வேண்டுமே என்ற வேதனையில் எப்போதும் உள்ளம் மூழ்கிக் கிடக்கின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 32, காதியான் பதிப்பு, 2028-ம் ஆண்டு)

* * * * * * * *

## நபிமொழி

### பெற்றோர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களுக்காக நற்செயல் செய்வதற்கான வழிமுறை

ஹஸ்ரத் அபூ உஸைத் அஸ்ஸாஇதி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானோம். அப்போது பனீ ஸல்மாவைச் சேர்ந்த ஒரு நபர் ஆஜரானார். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! பெற்றோர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களுக்காக நான் ஏதாவது நன்மையை செய்ய முடியுமா? என்று வினவினார்கள். அதற்கு அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஆம்! நிச்சயமாக ஏன் முடியாது? நீங்கள் அவர்களுக்காக துஆக்கள் செய்து வாருங்கள்; அவர்களுக்காக பாவமன்னிப்பு வேண்டுங்கள்; அவர்கள் என்ன வாக்குறுதிகள் கொடுத்திருந்தார்களோ அவற்றை முழுமை செய்யுங்கள்; அவர்களுடைய அன்பர்கள் மற்றும் உறவினர்களுடன் அவர்கள் தமது வாழ்வில் எவ்வாறு அழகிய முறையில் நடந்து வந்தார்களோ அதேபோன்று நீங்கள் அவர்களுடன் நடந்து கொள்ளுங்கள். மேலும் அவர்களின் நண்பர்களுடன் மரியாதையுடனும், கண்ணியத்துடனும் நடந்து வாருங்கள்.

(அபூதாவூத், கிதாபுல் அதப், பாப் : ஃபீ பர்ரே வாலிதைன்)

* * * * * *

## இஸ்லாம் இந்த தியாகத்தை எந்த மதிநுட்பமான ஞானமும் இன்றி வைத்தள்ளது என்று உண்மைத்துவத்தை அறியாத அந்த மக்களும், முஸ்லிம்களில் சில அறிவீனர்களும் ஆட்சேபனை செய்து விடுகின்றனர். இந்த பணத்திற்கு பகரமாக ஏன் கல்லூரிகள் தொடங்கப்படவில்லை? மேலும் அவ்வாறு செய்திருந்தால் சமுதாய முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகள் ஆகியிருக்கும் என்று ஆட்சேபனை செய்கின்றனர்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்ஹஜ், வசனம் 37-ற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனங்களில் அல்லாஹ் இந்த தியாகங்களின் பக்கம் கவனமூட்டியுள்ளான். அதாவது பைத்துல்லாஹ் ஹஜ்ஜுடைய சந்தர்ப்பத்தின்போது செய்யப்படுகின்ற அந்த தியாகத்தைக் குறித்து கவனமூட்டியுள்ளான். மேலும் இந்த தியாகங்கள் அல்லாஹ்வின் அடையாளங்களை சார்ந்ததாகும்; மேலும் உங்களுக்கு இந்த தியாகங்களில் அல்லாஹ்வின் புறமிருந்து பெரும் அருள் வைக்கப்பட்டுள்ளது. ஆனால், உண்மைத்துவத்தை அறிந்திராத மக்களும், முஸ்லிம்களில் சில அறிவீனர்களும் இஸ்லாம் இந்த தியாகத்தை எந்த மதிநுட்பமான ஞானமும் இன்றி வைத்தள்ளது என்று ஆட்சேபனை செய்து விடுகின்றனர். இந்த பணத்திற்கு பகரமாக ஏன் கல்லூரிகள் தொடங்கப்படவில்லை? மேலும் அவ்வாறு செய்திருந்தால் சமுதாய முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகள் ஆகியிருக்கும் என்று ஆட்சேபனை செய்கின்றனர். ஹஜ் சந்தர்ப்பத்தின்போது நாற்பதாயிரம் ஆடுகள் பலியிடப்படுகின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். மேலும் ஒரு ஆட்டின்

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பனூ முஸ்தலிக் போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களின் ஒளியில் இஃப்க் சம்பவத்தின் விளக்கம்**
**வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகளுக்காகவும், அநீதிக்குள்ளான பாலஸ்தீன மக்களுக்காகவும், முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்வதற்கான நினைவூட்டல்**

நகீஃ எனும் இடத்தை அடைந்த போது, அந்த நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கிடையில் குதிரை மற்றும் ஒட்டகங்களின் ஒட்டப் பந்தயங்களையும் நடத்தினார்கள். அன்னாருடைய கஸ்வா எனும் பெண் ஒட்டகம் எல்லா ஒட்டகங்களையும் முந்தி சென்றது

இஃப்க சம்பவம் தொடர்பாக வஹீ இறங்கியதற்கு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய முதல் கூற்று இதுவாகவே இருந்தது. அதாவது, ஆயிஷாவே அல்லாஹ் உம்மை குற்றமற்றவர் என்று அறிவித்து விட்டான் என அன்னார் (ஸல்) கூறினார்கள். வஹீ இறங்குகிறது என்று எனக்கு தெரியவந்தபோது, எனக்கு எவ்வித பதட்டமும் ஏற்படவில்லை. ஏனெனில் நான் குற்றமற்றவள் என்று எனக்கு தெரியும். அது வஹீயாக இருந்தாலும் அல்லாஹ் என்னை குற்றமற்றவளாகவே ஆக்குவான்; மேலும் அல்லாஹ் என் மீது அநீதியிழைக்க மாட்டான் என்பதையும் நான் அறிவேன்
ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்

இன்று நான் மீண்டும் துஆவின் பக்கம் நினைவூட்ட விரும்புகிறேன். வங்கதேசத்தின் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 16 ஆகஸ்ட் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஸஹ்ர்** மாதம் **16 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த சில குத்பாக்களில் பனூ முஸ்தலிக் போர் பற்றி கூறப்பட்டு வந்தது. இதைப் பற்றிய விளக்கத்தில் மேற்கொண்டு இவ்வாறு வருகிறது: பனூ முஸ்தலிக்கிலிருந்து திரும்பிச் செல்லும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் நகீஃ எனும் இடத்தை கடக்கும் போது மிகவும் பரந்த அளவில் புல்களையும், பல குளங்களையும் கண்டார்கள். அன்னார் அவற்றின் நீரைக் குறித்து விசாரித்தபோது! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கோடைக்காலம் வரும்போது தண்ணீர் குறைந்து விடும் என்று கூறப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹாத்திப் பின் அபீ பல்தா (ரலி) அவர்களிடம், கிணறு வெட்டுமாறும் நகீஃ என்ற அந்த இடத்தை மேய்ச்சலிடமாக ஆக்குமாறும் கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் பிலால் பின் ஹாரிஸ் மஸ்னீ (ரலி) அவர்களை கண்காணிப்பாளராக நியமித்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எங்கு வரை மேய்ச்சலிடமாக ஆக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் பொழுது விடிந்தவுடன் உரத்த குரலை கொண்ட ஒருவரை மலைக்கு முற்றிலும் உச்சியில் நிற்கச் செய்து அவருடைய குரல் எங்கு வரை சென்றடைகிறதோ அங்கு வரை முஸ்லிம்களின் ஒட்டகங்களுக்காகவும், குதிரைகளுக்காகவும் மேய்ச்சல் நிலத்தை உருவாக்குங்கள். அந்த கால்நடைகளில் சென்று முஸ்லிம்கள் ஜிஹாத் செய்வார்கள் என்று கூறினார்கள். அந்த நிலத்தின் பரப்பளவுக்கு இந்த அளவை அன்னார் வைத்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மேயக் கூடிய பொது முஸ்லிம்களின் கால்நடைகளை பற்றி என்ன கட்டளை? என்று ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அவை இதில் நுழையாது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

பிறகு அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! குறைவான எண்ணிக்கையில் செம்மறி ஆடுகளையும், ஆடுகளையும் வைத்திருக்கின்ற பலவீனமான ஆண்களைக் குறித்தும், பெண்களைக் குறித்தும் என்ன கட்டளை உள்ளது? அவர்கள் அவற்றை மேய்ச்சலுக்காக வேறு இடத்திற்கு கொண்டு செல்ல ஆற்றல் இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று நான் கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அவற்றை மேய்வதற்காக விட்டு விடுங்கள் என்று கூறினார்கள்.

அதாவது உருவாக்கப்பட்ட அந்த மேய்ச்சல் நிலத்தில் வருவதற்கு மட்டும் அந்த ஏழைகளுக்கு அனுமதி இருந்தது. வசதிபடைத்த மற்றவர்களிடம், நீங்கள் தத்தமது மேய்ச்சல் நிலத்தை தனியாக உருவாக்கிக் கொள்ளுங்கள்; இங்கு அரசாங்க கால்நடைகள் மட்டுமே மேயும் என்று கூறப்பட்டது. இந்த மேய்ச்சல் நிலம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோருடைய கிலாஃபத் காலகட்டம் வரை நிலைபெற்றிருந்துது. அதற்குப் பிறகு குதிரைகள் மற்றும் ஒட்டகங்களுடைய எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக இடத்தை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளை சுறுசுறுப்புடனும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருப்பதற்கு பெரும் ஏற்பாடுகளை செய்து வந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் அன்னார் (ஸல்) அவ்வப்போது விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வந்தார்கள். அவற்றில் வீரச் செயல்களும், ஈமானிய துணிச்சலும், ஜிஹாதுக்கான தர்பிய்யத்தின் அம்சமும் மிகைத்து காணப்பட்டது. இவ்வகையான விளையாட்டுகளின் மூலமாக அவர்களின் உறுதி, துணிச்சல், உற்சாகம் மற்றும் வீரம் ஆகியவை அதிகரித்தது. அதாவது விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. பனூ முஸ்தலிக்கிலிருந்து திரும்பி செல்லும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் நகீஃ எனும் இடத்தை அடைந்த போது, அந்த நாளில் அன்னார் ஸஹாபிகளுக்கிடையில் குதிரை மற்றும் ஒட்டகங்களின் ஒட்டப் பந்தயங்களையும் நடத்தினார்கள். அன்னாருடைய கஸ்வா எனும் பெண் ஒட்டகம் எல்லா ஒட்டகங்களையும் முந்தி சென்றது. அதில் ஹஸ்ரத் பிலால் பின் ரபாஹ் (ரலி) எனும் ஸஹாபி சவாரி செய்து கொண்டிருந்தார்கள். அதேபோன்று அன்னாருடைய குதிரை அனைத்து குதிரைகளையும் முந்தி சென்றது. அன்னாரிடம் இரண்டு குதிரைகள் இருந்தன. ஒன்றை லஸால் என்றும் மற்றொன்றை ஸரப் என்றும் அழைத்தனர். அந்நாளில் போட்டியில் ஸரப் பங்கெடுத்தது. அதில் ஹஸ்ரத் அபூ உஸைத் ஸாயிதீ (ரலி) அவர்கள் சவாரி செய்தார்கள். அதுவும் முதலாவதாக வந்தது.

இதே இடத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஒட்டப்பந்தயம் நடத்தியதற்கான குறிப்பும் காணக் கிடைக்கின்றது. இம்தாவுல் அஸ்மாஃ எனும் நூலில் வருகிறது: இந்தப் போரில் அதாவது பனூ முஸ்தலிக் பயணத்தின் போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஒட்டப்பந்தயம் நடத்தினார்கள். அவர்கள் தம் உடைகளை மடக்கிக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும் தம் மேல் கோட்டை மடக்கிக் கொண்டு ஓடலானார்கள். அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை விட முந்திச் சென்று விட்டார்கள். பிறகு

அன்னாரிடம், நீங்கள் என்னை கடந்த முறை முந்தி சென்றதற்கு பதிலுக்கு பதில் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இந்தக் கூற்றில் பெருமானார் (ஸல்) அவர்கள் முந்தைய சம்பவம் ஒன்றின் பக்கம் சுட்டிக் காட்டினார்கள். ஒருமுறை அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டுக்கு சென்றிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் கைகளில் ஒரு பொருளைக் கண்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அதை காண்பதற்காக கேட்ட போது அவர்கள் மறுத்து விட்டார்கள்; அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அன்னாரும் அவர்களை நோக்கி ஓடினார்கள். ஆனால், அவர்களோ கையில் அகப்படவில்லை ; முன்னே சென்று விட்டார்கள்.

இவை அன்னாருடைய வீட்டுக்குள் நடந்த விஷயங்களாக இருந்தன. தம் வீட்டை மகிழ்ச்சிகரமாக ஆக்குவதற்காக அன்னார் இவற்றை செய்து வந்தார்கள். ஒவ்வொரு விஷயத்திலும் நமக்கு முன்னால் பெருமானார் (ஸல்) அவர்கள் அழகிய முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள். தம் மனைவிகள் மீது மிகக் கடுமையாக நடந்து கொள்ளக் கூடியவர்களுக்கும் இவை அழகிய முன்மாதிரியாகும்.

அல்லாமா இப்னு ஜவ்ஸீ அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பை எடுத்துரைத்துள்ளார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பயணத்தில் சென்றேன். அப்போது நான் குறைந்த வயதுடையவளாகவும், மெல்லிய தேகம் உடையவளாகவும் இருந்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடம் (ஓட்டப் பந்தயத்திற்காக) ஓடுங்கள் என்று கூறினார்கள். அனைவரும் ஓடினார்கள்.

பிறகு அன்னார் (ஸல்) என்னிடம், நாம் ஓடிப் பார்க்கலாம் என்று கூறினார்கள். அதாவது ஓட்டப் பந்தயம் நடத்தலாம் என்றார்கள். ஆகவே நாங்கள் ஓடினோம். நான் முந்தி சென்று விட்டேன்.

முதலில் கூறப்பட்ட அறிவிப்பு வேறொரு சந்தர்ப்பமாக இருந்திருக்கலாம். ஆக, அழகிய நடைமுறையைக் கொண்ட இந்த சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டே இருந்தன.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அதற்குப் பிறகு நீண்ட காலம் கழிந்து விட்டது. அப்போது எனது உடல் கொஞ்சம் பருமன் ஆகிவிட்டது. ஒருமுறை நான் அன்னாருடன் பயணத்தில் இருந்தேன். இந்த முறையும் அன்னார் (ஸல்) மக்களிடம் ஓட்டப் பந்தயம் நடத்துங்கள் என்று கூறினார்கள். ஆகவே அனைவரும் ஓடினார்கள். அதற்குப் பிறகு அன்னார் (ஸல்) என்னிடம் நாம் ஓட்டப் பந்தயத்தை நடத்தலாம் என்று கூறினார்கள். ஓட்டப் பந்தயம் நடைபெற்றது. இந்த முறை அன்னார் (ஸல்) வெற்றி பெற்று விட்டார்கள். அப்போது அன்னார் (ஸல்) சிரித்துக் கொண்டே இது முந்தைய தடவை நடந்ததற்கு பதிலுக்கு பதில் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களும் தம் மனைவிகளுடன் உலாவுவார்கள். ஒருமுறை படைக்கு முன்னால் அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஓட்டப் பந்தயம் நடத்தினார்கள். படைக்கு முன்னால் ஓடினார்கள்; தனி இடத்தில் கிடையாது. அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் தோற்று விட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் வெற்றி பெற்றார்கள். பிறகு மற்றொரு சந்தர்ப்பத்தில் ஓடினார்கள். அப்போது அன்னார் (ஸல்) வெற்றி பெற்றார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தோற்று விட்டார்கள். ஏனெனில், அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் உடல் கொஞ்சம் பருமன் ஆகிவிட்டது. அப்போது அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், يَا عَائِشَةُ تِلْكَ بِتِلْكَ

என்று கூறினார்கள்.

பொருள்:

அந்த தோல்விக்கு பதிலாக இந்த தோல்வி.

சுருக்கமாக, பெருமானார் (ஸல்) அவர்கள் தம் மனைவியுடன் உலாவுவதை குறைபாடாக கருத மாட்டார்கள். இஸ்லாம் எந்த விஷயத்திற்கு அனுமதி கொடுத்துள்ளதோ அதை தவறு என்று கூறமுடியாது. முந்தைய காலத்தில் சிலர் இவ்வாறு நினைத்தார்கள். இப்பொழுதும் கூட சிலர் எவ்வாறு உள்ளார்கள் என்றால், மனைவிகளுடன் பெரும் வேறுபாட்டை காட்டுகிறார்கள். தவறான வகையிலான வெட்கத்தையும் கொண்டுள்ளார்கள். கணவன்மார்கள் முன்னால் செல்வார்கள்: மனைவிமார்கள் பின்னால் சென்று கொண்டிருப்பார்கள். அல்லது இடைவெளி விட்டு சென்று கொண்டிருப்பார்கள். தற்காலத்தில் இப்படிப்பட்ட மக்கள் யாராவது இருப்பார்கள் என்றால் அவர்களுக்கும் இந்த முன்மாதிரி உள்ளது. பெண்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்வது தொடர்பாக இஸ்லாம் கற்றுத் தந்ததாகும் இது. பெருமானார் (ஸல்) அவர்கள் இதற்கான முன்மாதிரியை நிலைநாட்டி இருக்கிறார்கள்.

இந்த பயணத்தில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் மீது அவதூறு சுமத்தப்பட்ட குறிப்பும் காணக் கிடைக்கின்றது. அதனுடைய விபரம் இவ்வாறு உள்ளது. பனூ முஸ்தலிக்கிலிருந்து திரும்பிச் சென்ற போது நயவஞ்சகர்கள் சார்பாக இன்னொரு குழப்பமும் உருவாக்கப்பட்டது. அது என்னவென்றால், அவர்கள் உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது ஒரு பொய்யான அவதூறை சுமத்திய சம்பவமாகும். அது இஃப்க் சம்பவம் முதலாவது சம்பவமாகும். அங்கு அப்துல்லாஹ் பின் உபை சண்டை மூட்டி விடுவதற்கு முயற்சி செய்தான். மற்றொரு சம்பவமும் நிகழ்ந்தது. ஸஹீஹ் புகாரீயின் அறிவிப்பின் அடிப்படையில் அவதூறு சுமத்தப்பட்ட சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு பயணம் புறப்பட விரும்பினால் தம் மனைவிமார்களிடையே சீட்டுக் குலுக்கிப் போடுவார்கள். அவர்களில் எவருடைய (பெயருள்ள) சீட்டு வருகிறதோ அவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்படுவார்கள். இவ்வாறே, பெருமானார் (ஸல்) அவர்கள் புறப்பட்டுச் சென்ற ஒரு போருக்காக எங்களிடையே சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். அதில் என்னுடைய (பெயருள்ள) சீட்டு வந்தது. எனவே நான் அன்னாருடன் புறப்பட்டுச் சென்றேன். இது பர்தாவின் சட்டம் அருளப்பட்ட பிறகு நடந்ததாகும். நான் என்னுடைய ஒட்டகப் பல்லக்கில் வைத்து சுமந்து செல்லப்பட்டும், அதில் இருக்கும் நிலையிலேயே கீழே இறக்கி வைக்கப்படும் வந்தேன். இவ்வாறே நாங்கள் பயணம் செய்தோம். எந்த அளவுக்கென்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் போர் முடிந்து திரும்பிக் கொண்டிருந்த நிலையில் நாங்கள் மதீனாவை நெருங்கியபோது, இரவு நேரத்தில் புறப்படும்படி அன்னார் (ஸல்) அறிவித்தார்கள். புறப்பட வேண்டும் என அறிவித்தபோது நான் (பல்லக்கிலிருந்து) எழுந்து படையைக் கடந்து சென்றேன்.

அதாவது, இயற்கைக் கடனை நிறைவேற்றுவதற்காக வெளியே சென்று விட்டார்கள்.

கூறுகிறார்கள்: என் தேவையை நான் முடித்துக் கொண்ட பின் என் சவாரியை நோக்கிச் சென்றேன். அப்போது என் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தேன். (என் கழுத்திலிருந்த) ஸஃப்பார் எனும் கல் மாலையொன்று அறுந்து விழுந்து விட்டிருந்தது.

கூறுகிறார்கள்: எனவே நான் திரும்பிச் சென்று என்னுடைய மாலையைத் தேடலானேன்; அதைத் தேடிக் கொண்டிருந்தது (நான் சீக்கிரம் திரும்பிச் சென்று படையினருடன் சேர விடாமல்) என்னைத் தடுத்தது. அதாவது, தாமதமாகிவிட்டது. என்னை பல்லக்கில் எடுத்துச் சென்று ஒட்டகத்தில் வைக்கும் குழுவினர், நான் இருப்பதாக எண்ணிக் கொண்டு, அதைச் சுமந்து சென்று நான் சவாரி செய்து வந்த என் ஒட்டகத்தின் மீது வைத்துக் கட்டி விட்டனர். அந்த நாட்களில் பெண்கள் பருமனாக இன்றி மெலிந்தவர்களாக இருந்தனர். அவர்களுக்கு சதை போட்டிருக்கவில்லை. சிறிதளவு உணவையே அவர்கள் உண்பார்கள். எனவே பல்லக்கை தூக்கிய போதும், அதைச் சுமந்த போதும் அது கனமில்லாமல் இருந்ததை மக்கள் வித்தியாசமாகக் கருதவில்லை. நான் வயது குறைந்த இளம் பெண்ணாக இருந்தேன். அவர்கள் ஒட்டகத்தை (முன்னே) அனுப்பி விட்டு நடக்கலானார்கள். படை சென்ற பிறகு (தொலைந்து போன) என்னுடைய மாலை கிடைத்து விட்டது.

அவர்களோ சென்று விட்டிருந்தார்கள். நான் மாலையை தேடிக் கொண்டிருந்தேன். நான் அதை தேடிக் கண்டுபிடித்தேன்.

கூறுகிறார்கள்: நான் அவர்கள் முகாமிட்டிருந்த இடத்திற்கு திரும்பி வந்தேன். அங்கு அவர்களில் அழைப்பவரோ, பதில் கொடுப்பவரோ எவரும் இருக்கவில்லை. அனைவரும் சென்று விட்டிருந்தனர். எவரும் தென்படவில்லை. நான் ஏற்கனவே தங்கியிருந்த இடத்தைத் தேடிப் போனேன்.

எங்கு என்னுடைய கூடாரம் இருந்ததோ அல்லது எது எனது இடமாக இருந்ததோ அங்கு சென்றேன்.

நான் காணாமல் போயிருப்பதைக் கண்டு படையினர் என்னிடம் திரும்பி வருவார்கள் என்று நான் கருதினேன். நான் என்னுடைய இடத்தில் அமர்ந்திருக்கும் போது நான் கண்ணயர்ந்து தூங்கி விட்டேன். ஸஃப்வான் பின் முஅத்தல் ஸுலமீ ஸக்வானீ என்பவர் படைக்கு பின்னால் இருந்தார்.




படையினர் தவற விட்டுச் செல்லும் பொருட்களை எடுத்து வருவதற்கு அவர் பணியமர்த்தப் பட்டிருந்தார். நான் தங்கியிருந்த இடத்திற்கு அருகில் அவர் காலையில் வந்தார். அவர் தூங்கிக் கொண்டிருந்த ஓர் உருவத்தைப் பார்த்தார். பர்தாவுடைய சட்டம் அருளப்படுவதற்கு முன்னர் அவர் என்னைப் பார்த்திருந்தார். எனவே என்னைப் பார்த்ததும் அவர் அடையாளம் கண்டு கொண்டார். அவர் இன்னாலில்லாஹ் என்று கூறும் சப்தத்தைக் கேட்டு நான் கண் விழித்தேன். அவர் என்னை அடையாளம் கண்டு கொண்ட போது நான் என்னுடைய போர்வையால் என் முகத்தை மறைத்துக் கொண்டேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அவர் இன்னாலில்லாஹ் என்று கூறியதைத் தவிர வேறெதையும் நான் அவரிடமிருந்து கேட்கவுமில்லை. அவர் தம் ஒட்டகத்திலிருந்து கீழே இறங்கி அதை மண்டியிடச் செய்து (நான் ஏறிக் கொள்ள வசதியாக) அதன் முன்னங்காலை (தன் காலால்) மிதித்துக் கொண்டார். நான் எழுந்து சென்று ஒட்டகத்தில் ஏறிக் கொண்டேன். அவர் என்னுடன் ஒட்டகத்தை ஓட்டிக் கொண்டு நடக்கலானார். இறுதியில் கடும் வெப்பத்தில் நடுப்பகல் நேரத்தில் நாங்கள் படையினரை வந்தடைந்தோம். அப்போது மக்கள் முகாமிட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: (இப்போது எங்கள் இருவரையும் கண்டு அவதூறு பேசி என் விஷயத்தில்) அழிந்தவர்கள் அழிந்து போனார்கள். என் மீது அவதூறு செய்வதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டிருந்தவன் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் ஆவான்.

(இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான) உர்வா என்பவர் கூறினார்: அந்தப் பழிச் சொல் பரப்பப்படும். அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூலிடம் கூறப்பட்டும் வந்தது. அப்போது அவன் அதை ஏற்று, காது தாழ்த்திக் கேட்டு அதை கிளறிவிட்டுக் கொண்டிருந்தான் - என்று எனக்குச் செய்தி கிடைத்தது.

அவதூறு கூறியவர்களில் ஹஸ்ஸான் பின் ஸாபித், மிஸ்தஹ் பின் உஸாஸா, ஹம்னா பின்த் ஜஹ்ஷ் ஆகியோரைத் தவிர மற்ற சிலரின் பெயர்கள் தமக்குத் தெரியாது என்றும் உர்வா கூறினார்.

இது அறிவித்தவர் கூறியதாகும். ஆனால் அல்லாஹ் கூறியது போன்று அவர்கள் ஒரு குழுவினர் ஆவார்கள். அதில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவன் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் ஆவான். தமக்கு முன்னால் ஹஸ்ஸான் அவர்கள் ஏசப்படுவதை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் விரும்பாதவர்களாக இருந்தார்கள். என் தந்தையும், அவருடைய தந்தையும், அதாவது என் தந்தையின் தந்தையும், என்னுடைய மானமும் உங்களுக்கெதிராக முஹம்மத் (ஸல்) அவர்களின் மானத்தைக் காக்கும் கேடயமாகும் என்று அந்த ஹஸ்ஸான் கூறியிருந்தார் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுவார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களுடன் களங்கமற்ற தொடர்பும், நன்றி உணர்வும் கொண்டிருந்தார்கள். எனவே அவரைக் குறித்து ஏசிப் பேசுவதை கேட்க விரும்பவில்லை.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு நாங்கள் மதீனா வந்தடைந்தோம். அங்கு வந்து சேர்ந்து ஒரு மாத காலம் நான் நோயுற்று விட்டேன்.

பயணம் முடிந்து விட்டது. பயணக் குழு புறப்பட்டு வந்தடைந்து விட்டார்கள்.

கூறுகிறார்கள்: நான் அங்கு (மதீனா) சென்றடைந்த பிறகு நோயுற்று விட்டேன். மக்களோ அவதூறு கற்பித்தவர்களின் கூற்றைப் பரப்பிக் கொண்டிருந்தார்கள். இந்த அவதூறு பற்றி எனக்கு எதுவுமே தெரியாது.

நான் நோயுற்று இருந்த போது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் வழக்கமாகக் காட்டுகிற பரிவை (இந்த முறை) நான் அவர்களிடம் காண முடியாமல் போனது என்னிடத்தில் நிம்மதியற்ற நிலையை ஏற்படுத்தியது. நான் நோயுற்றிருந்தபோது அன்னார் என்னிடம் வருவார்கள்: ஸலாம் கூறுவார்கள்; பிறகு எப்படி இருக்கின்றாய்? என்று கேட்பார்கள்; பிறகு போய்விடுவார்கள். அவ்வளவு தான். இதை விட அதிகமாக பரிவு காட்டவில்லை. இந்த விஷயம் என்னை நிம்மதியிழக்கச் செய்திருந்தது. (என்னைக் குறித்து வெளியே பேசப்பட்டு வந்த) அந்த தீய விஷயத்தைக் குறித்து, நான் நோயிலிருந்து குணமடைந்து வெளியே செல்லும் வரை எனக்குத் தெரியாது. அப்போது நான் மிஸ்தஹின் தாயாருடன் நாங்கள் கழிப்பிடமாகப் பயன்படுத்தி வந்த மனாஸிஃ (எனப்படும் புறநகர்ப் பகுதியை) நோக்கிச் சென்றோம். நாங்கள் இரவு நேரங்களில் மட்டும் இவ்வாறு செல்வோம். எங்கள் வீடுகளுக்கு அருகிலேயே கழிப்பிடங்களை அமைத்துக் கொள்வதற்கு முன்னால் நாங்கள் இவ்வாறு சென்று கொண்டிருந்தோம்.

அதாவது, இயற்கை உபாதையை கழிப்பதற்காக வெளியே சென்று வந்தார்கள். அதுவும் இரவு நேரத்தில் பெண்கள் சென்று வந்தனர். அக்கால கட்டத்தில் வீடுகளில் கழிப்பிடங்கள் இருந்ததில்லை.

கூறுகிறார்கள்: இயற்கை உபாதையை கழிப்பதற்காக நாங்கள் காடுகளுக்கு செல்லக் கூடிய எங்களுடைய இந்த வழக்கம் முந்தைய அரபுகளின் வழக்கத்தை ஒத்ததாயிருந்தது. எங்கள் வீடுகளுக்கு அருகிலேயே கழிப்பிடங்கள் அமைப்பதை நாங்கள் தொந்தரவாகக் கருதி வந்தோம்.

எவ்வாறிருப்பினும், வீடுகளில் கழிப்பிடங்கள் அமைக்கக் கூடிய வழக்கம் ஏற்பட்டது.

தொடர்ந்து அவர்கள் கூறுகிறார்கள்: நானும் உம்மு மிஸ்தஹும் சென்றோம். அவர் அபூ ருஹ்மி பின் முத்தலிப் பின் அப்து மனாஃப் அவர்களின் மகளாவார். ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களின் தாயின் சகோதரியான ஸக்ர் பின் ஆமிர் தான் உம்மு மிஸ்தஹின் தாயாராவார். உம்மு மிஸ்தஹின் மகன்தான் மிஸ்தஹ் பின் உஸாஸா பின் அப்பாத் பின் முத்தலிப் ஆவார். உம்மு மிஸ்தஹும் நானும் எங்கள் (இயற்கைத்) தேவைகளை முடித்துக் கொண்டு என் வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தோம். அப்போது, உம்மு மிஸ்தஹ் தன் ஆடையில் இடறிக் கொண்டார். உடனே, அவர் மிஸ்தஹ் நாசமாகட்டும்! என்று தன் (மகனை சபித்தவராகக் ) கூறினார்.மிக மோசமான சொல்லை கூறிவிட்டீர்; பத்ர் போரில் பங்கெடுத்த ஒரு மனிதரையா ஏசுகிறீர்! என்று நான் கூறினேன். அதற்கு, அப்பாவியே! அவர் என்ன கூறினார் என்று நீங்கள் கேள்விப்படவில்லையா? என்று அவர் கேட்டார். அவர் என்ன கூறினார்? என்று நான் வினவ அவதூறு கற்பித்தவர்கள் சொன்னதை அவர் எனக்குத் தெரிவித்தார். அதைக் கேட்டு என் நோய் இன்னும் அதிகரித்து விட்டது.

இன்னோர் அறிவிப்பில் இயற்கை தேவைக்காக சென்ற சம்பவம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் இயற்கை தேவைக்காக வெளியே சென்றிருந்தேன். என்னுடன் உம்மு மிஸ்தஹ் இருந்தார். அவர் கால் தடுமாறியபோது, மிஸ்தஹ் நாசமாகட்டும் என்று கூறினார். தாயாரே! உங்கள் மகனையே நீங்கள் ஏசுகிறீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் மௌனமாகிவிட்டார்கள். பிறகு, இரண்டாம் முறை கால் தடுக்கியபோது அவர்கள், மிஸ்தஹ் நாசமாகட்டும்! என்று கூறினார்கள். அதற்கு, நான் உங்கள் மகனை நீங்கள் ஏசுகறீர்களே! என்று கேட்டேன். பிறகு அவர்கள் மூன்றாம் முறை கால் தடுக்கியபோது, மிஸ்தஹ் நாசமாகட்டும்! என்று கூறினார்கள். அப்போது நான் அவர்களை அதட்டினேன்.

ஒருவேளை அவர்கள் இதைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும்போது கவனமற்ற நிலையில் கால் இடறியிருக்கலாம்.

எவ்வாறிருப்பினும், நான் அவர்களை அதட்டியபோது அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்கள் காரணமாகவே அவனை ஏசிப்பேசுகிறேன் என்று அவர்கள் கூறினார்கள்.

நான் அவனை ஏசிப்பேசுகிறேன் என்றால் அது உங்கள் காரணமாகவே பேசுகிறேன். அந்த விஷயங்கள் என் சிந்தனைகளில் வந்து விடுகின்றன என்று கூறினார்கள். என் காரணமாக ஏன்? என்று நான் கேட்டேன்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அவர்கள் என்னிடம் அனைத்து விஷயங்களையும் வெளிப்படையாகக் கூறினார்கள். இந்த விஷயங்கள்தான் பேசப்படுகின்றனவா? என்று நான் கேட்டேன். ஆம்! அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்று அவர்கள் கூறினார்கள். நான் என் வீட்டுக்குத் திரும்பி வந்தேன். எந்த தேவைக்காக நான் வெளியே சென்றேனோ அது கொஞ்சமாகவோ அல்லது அதிகமாகவே - அது முற்றிலும் இல்லாததைப் போன்று எனக்கு தோன்றியது.

நான் என் இல்லத்திற்குத் திரும்பி வந்தபோது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் வந்து ஸலாம் கூறிவிட்டு எப்படி இருக்கின்றாய்? என்று கேட்டார்கள். அப்போது, என் தாய் தந்தையரிடம் செல்ல எனக்கு அனுமதி தருவீர்களா? என்று நான் கேட்டேன்.

செய்தியை தம் பெற்றோரிடமிருந்து உறுதிப்படுத்திக் கொள்ள தாம் விரும்பியதாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். இப்னு ஹிஷ்ஷாம் எடுத்துரைத்தது என்னவென்றால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தம் பெற்றோருடைய

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716

89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

வீட்டுக்கு சென்றபோது அவதூறைக் குறித்து அவர்கள் அறிந்திருக்கவில்லை. மேலும் உம்மு மிஸ்தஹ் உடைய சம்பவமும் பெற்றோருடைய வீட்டுக்கு சென்ற பிறகுதான் நிகழ்ந்தது.

எவ்வாறு இருப்பினும் இந்த இரு அறிவிப்புகளும் காணக் கிடைக்கின்றன.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு அனுமதியளித்தார்கள்.

இன்னோர் அறிவிப்பில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் என்னுடன் ஒரு பணியாளரையும் அனுப்பி வைத்தார்கள். நான் வீட்டில் நுழைந்தேன். அப்போது என் தாயாராகிய உம்மு ரூமான் அவர்களை வீட்டில் கீழ் தளத்திலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை வீட்டின் மேல் தளத்திலும் கண்டேன். அவர்கள் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார்கள்.

இது புகாரீயுடைய அறிவிப்பாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் என் தாயாரிடம் தாயரே, மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்? என்று கேட்டேன். என் தாயார் அன்பு மகளே இதை பெரிதுபடுத்திக் கொள்ளாதே! தைரியமாக இரு! அல்லாஹ்வின் மீதாணையாக! சகக்களத்திகள் பலரும் இருக்க, (தன்) கணவரின் பிரியத்திற்குரியவளாக இருக்கும் அந்த அழகான பெண்ணொருத்திக்கெதிராக அவளுடைய சகக்களத்திகள் அதிகமாக பேசத்தான் செய்வார்கள். அவ்வாறு பேசாமாலிருப்பது (பெரும்பாலும்) குறைவேயாகும் என்று கூறினார்கள். ஸுப்ஹானல்லாஹ். இப்படியா மக்கள் என்னைப் பற்றி பேசிக் கொள்கிறார்கள் என்று நான் கேட்டேன்.

இன்னோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மேல்தளத்தில் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார்கள். என் குரல் கேட்டபோது கீழே இறங்கி வந்து என் தாயாரிடம் இவளுக்கு என்ன ஆயிற்று? என்று கேட்டார்கள். இவளைப் பற்றி பேசப்பட்டு வருகின்ற விஷயம் இவள் வரை வந்தடைந்து விட்டது என்று தன் தாயார் கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. என் அன்பிற்குரிய மகளே! நான் சத்தியமிட்டுக் கூறுகிறேன். நீ உன் வீட்டுக்கு திரும்பிவிடு! என்று அவர்கள் கூறினார்கள். ஆகவே நான் வீட்டுக்குத் திரும்பி விட்டேன்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அன்றிரவு காலை வரை நான் அழுதேன். என் கண்ணீரும் நிற்கவில்லை ; எனக்கு உறக்கமும் வரவில்லை. காலை நேரம் வந்தபோதும் அழுதேன். வஹீ இறங்குவது நின்று போயிருந்த போது, அலீ பின் அபீ தாலிப் அவர்களையும் உஸாமா பின் ஸைத் அவர்களையும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அழைத்தார்கள். அவ்விருவரிடமும் தம் மனைவியைப் பிரிந்து விடுவது குறித்து ஆலோசனை கேட்டார்கள்.

அதாவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை குறித்து.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: உஸாமா (ரலி) அவர்களோ நான் நிரபராதி என தாம் அறிந்துள்ளதையும், நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தார் மீது உள்ளத்தில் தாம் கொண்டிருந்த (பாசத்)தையும் வைத்து ஆலோசனை கூறினார்கள். (இறைத் தூதர் அவர்களே) தங்களின் துணைவியாரிடம் நல்லதைத் தவிர வேறெதையும் நான் அறியவில்லை என்று உஸாமா கூறினார்கள்.

அவர்களை விட்டு விடலாம் என்ற கேள்விக்கே இடமில்லை என்றார்கள். இன்னோர் அறிவிப்பில் வருகிறது; இது முற்றிலும் பொய் ஆகும்; அடிப்படையற்றது என்று உஸாமா கூறினார்கள்.

இறைத் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் உங்களுக்கு எந்த நெருக்கடியையும் ஏற்படுத்தவில்லை; ஆயிஷா அன்றிப் பெண்கள் நிறையப் பேர் இருக்கின்றனர்; பணிப் பெண்ணைக் கேளுங்கள். அவள் உங்களிடம் உண்மையைச் சொல்வாள் என்று அலீ அவர்களோ கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சிறிது சந்தேகத்தை வெளிப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எனவே இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பரீராவை அழைத்தார்கள்.

பரீரா என்பவர் பணிப் பெண் ஆவார்.

பரீராவே! நீ (ஆயிஷாவிடம்) உனக்கு சந்தேகத்தை ஏற்படுத்தும் எதையாவது பார்த்திருக்கிறாயா? என்று கேட்டார்கள். அதற்கு பரீரா, தங்களை சத்தியத்துடன் அனுப்பியவன் மீது ஆணையாக! அவர் தம் வீட்டிலுள்ளவர்களுக்காக குழைத்த மாவை அப்படியே போட்டுவிட்டு உறங்கிப் போய் விடுவார் ; வீட்டிலுள்ள ஆடு வந்து அதைத் தின்று விடும்.

அதாவது ஆழ்ந்த தூக்கம் இருக்கும்.

கொஞ்சம் கவனக் குறைவு இருக்கும். இதைத் தவிர வேறு எந்த தீமையும் இல்லை என்றார்.

இன்னோர் அறிவிப்பில் வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளில் ஒருவர் அந்த சேவகியை அதட்டியவாறு, இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் உண்மையை கூறு! என்று கூறினார். எந்த அளவுக்கென்றால் அம்மக்கள் அதைக் குறித்து அவரிடம் துருவித்துருவி விசாரித்தனர். அதற்கு, அல்லாஹ் தூய்மையானவன் ஆவான்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! பொற்கொல்லர் களங்கமற்ற தூய தங்கத்தைப் பற்றி எந்த அளவுக்கு அறிவாரோ அதே அளவுக்கு நான் அவர்களைப் பற்றி அறிவேன். எப்பொழுதும் நான் அவர்களிடம் நன்மையை மட்டுமே கண்டுள்ளேன் என்று அவர் கூறினார்.

ஓர் அறிவிப்பில் வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் உம்மு அய்மன் அவர்களிடமும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைக் குறித்து விசாரித்தார்கள். அதற்கு அவர்கள் நான் என் காதுகளையும், கண்களையும் காப்பாற்றி வைத்துள்ளேன். நான் ஆயிஷாவைக் குறித்து எப்போதும் நல்லெண்ணம் கொண்டுள்ளேன்; நல்ல விஷயங்களை மட்டுமே அறிவேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் தம் தூய மனைவியாகிய ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஜஹஷ் (ரலி) அவர்களிடமும் என்னைக் குறித்து கேட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களிடம், பேசப்படுகின்ற விஷயங்களைக் குறித்து நீங்கள் ஏதாவது அறிவீர்களா? அல்லது அதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எனது காதுகளையும், கண்களையும் பாதுகாத்து வைத்துள்ளேன். நான் மிக்க உணர்வுடன் உள்ளேன். என்னுடைய அனைத்தும் நலமுடன் உள்ளன. என் கண்களும் நலமாக உள்ளன. என் காதுகளும் நலமாக உள்ளன. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நன்மையைத் தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது.

நான் (அவர்களிடத்தில்) நன்மையை மட்டுமே கண்டுள்ளேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவிமார்களுள் என்னுடன் போட்டி போடக் கூடியவராக இவர் (அதாவது, ஸைனப்) இருந்தார். ஆனால், இறையச்சத்தின் காரணமாக அல்லாஹ் அவரை பாதுகாத்தான். அவர் தவறாக எதுவும் பேசவில்லை. அவருடைய சகோதரி ஹம்னா, அவருக்காக என்னுடன் சண்டையிட்டு வந்தாள். (அவதூறு பேசி) அழிந்து போனவர்களுடன் இவளும் அழிந்து போனாள். அதாவது, அவளுடைய முடிவு நல்லதாக இல்லை.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! எவரைக் குறித்து (அந்தப் பழிச் சொல்) கூறப்பட்டதோ அந்த மனிதர் அதாவது, ஸஃப்வான் பின் முஅத்தல், களங்கமற்ற என்னுடைய உயிர் எவன் கையில் உள்ளதோ அவன் மீது சத்தியமாக! நான் ஒருபோதும் எந்த பெண்ணின் மறைவிடத்தையும் திறந்ததில்லை என்று கூறினார்.

அதாவது ஒருபோதும் எந்தவொரு பெண்ணுடனும் தொடர்பு வைத்திருக்கவில்லை என்றார்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அதன் பிறகு அவர் இறைவழியில் ஷஹீதாகி விட்டார். அதாவது அவர் எப்படிப்பட்ட நல்ல மனிதராக இருந்தார் என்றால் ஷஹாதத் எனும் அந்தஸ்தை அடைந்தார்.

அல்லாமா இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்: ஹஸ்ரத் அபூ அய்யூப் காலித் பின் அன்ஸாரி (ரலி) அவர்களின் மனைவி உம்மு அய்யூப் (தம் கணவரிடம்), அபூ அய்யூபே! ஆயிஷாவைக் குறித்து மக்கள் என்ன பேசுகிறார்கள் என்று நீங்கள் அறிவீர்களா? என்று கேட்டார்கள்.

அதற்கு அபூ அய்யூப் (ரலி) ஆம்! நான் கேட்டேன். அவை அனைத்தும் பொய் ஆகும்; உம்மு அய்யூபே! நீங்கள் இவ்வாறான செயலை செய்வீர்களா? என்று கேட்டார்கள். இறைவன் மீது ஆணையாக! நான் இவ்வாறான செயலை செய்ய மாட்டேன் என்று உம்மு அய்யூப் கூறினார்கள்.

அப்படியென்றால் ஆயிஷா உம்மை விட எவ்வளவோ மேன்மையானவரும், சிறந்தவரும் ஆவார். அவர் இத்தகைய செயலை எப்படி செய்திருக்க முடியும்? என்று அபூ அய்யூப் (ரலி) கேட்டார்.

ஸஹீஹ் புகாரீயில் வருகிறது. அந்த சந்தர்ப்பத்தில் அன்ஸாரி நபர் ஒருவர், அல்லாஹ்வே! நீ தூயவன் ஆவாய்; இந்த விஷயத்தை மேற்கொண்டு கூறிக் கொண்டு இருப்பது எங்கள் வேலை அல்ல ; இறைவா! நீ தூயவனாவாய்; இது மிகப் பெரும் அவதூறாகும் என்று கூறினார்.

இதுவும் புகாரீயுடைய அறிவிப்பாகும்.

புகாரீயின் விரிவுரையாளரான அல்லாமா இப்னு ஹஜர் கூறுகிறார்கள்: இந்த விஷயத்தை அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி)

அவர்கள் கூறினார்கள்: மேலும், ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்களிடமிருந்து இவ்வாறு அறிவிக்கப்படுகிறது: இவ்விஷயத்தை அவர்கள் தம் மனைவியான ஹஸ்ரத் உம்மு துஃபைலிடம் கூறியிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அன்றே இறைத் தூதர் (ஸல்) அவர்கள், உரை மேடையில் ஏறி நின்று அப்துல்லாஹ் பின் உபையைக் குறித்து அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள்.

மேலும்,அன்னார் (ஸல்) உரை மேடையில் இருந்தவாறு, முஸ்லிம்களின் கூட்டத்தினரே! என் வீட்டார் விஷயத்தில் எனக்கு வேதனையளித்த ஒரு மனிதன் விஷயத்தில் எனக்கு உதவி புரிபவர் யார்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! என் வீட்டாரிடம் நான் நல்லதை மட்டுமே அறிவேன்; அவர்கள் எப்படிப்பட்ட ஒரு நபரைக் குறித்து (அவதூறு) கூறியுள்ளனர் என்றால் அவரைப் பற்றி நான் நல்லதையே அறிவேன் என்று கூறினார்கள்.

அதாவது ஸஃப்வான் பின் முஅத்தல், (அந்த) ஆண் நபரைக் குறித்தும், நான் அவரிடம் நன்மையை கண்டுள்ளேன். என்னோடுதான் அவர் என் வீட்டாரிடம் வந்திருக்கிறார். அவர் என்னுடன் வந்திராத எந்த பயணத்திலும் நான் சென்றதில்லை என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

உடனே பனூ அப்தில் அஷ்ஹல் கூட்டத்தைச் சேர்ந்த ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். சிலரைப் பொருத்தவரையில் ஹஸ்ரத் உஸைத் பின் ஹுஸைர் (ரலி) ஆவார்கள்.

அன்னார் (ரலி) எழுந்து நின்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தங்களை காப்பாற்றுவேன் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மன வேதனையை மக்களுக்கு முன் வெளிப்படுத்தியபோது, இவர்கள் எழுந்து நின்று தவறான அவதூறு மற்றும் தங்கள் வீட்டினர் விஷயத்தில் தங்களுக்கு கொடுக்கப்படுகின்ற துன்பம் ஆகியவற்றிலிருந்து நான் தங்களை காப்பாற்றுவேன். அவன் அவ்ஸ் குலத்தைச் சேர்ந்தவனாயிருந்தால் நாங்கள் அவனுடைய கழுத்தைத் துண்டித்து விடுகிறோம். எங்கள் சகோதரர்களான கஸ்ரஜ் குலத்தைச் சேர்ந்தவனாக அவன் இருந்தால் தாங்கள் எங்களுக்கு என்ன உத்தரவிடுகிறீர்களோ? அவ்வாறே தங்களின் உத்தரவை நாங்கள் நிறைவேற்றுகிறோம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

கஸ்ரஜ் குலத்தைச் சேர்ந்த ஒருவர் எழுந்தார். அவர் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவரான ஸஅத் பின் உபாதா ஆவார். ஹஸ்ஸான் அவர்களின் தாயார், இவருடைய கிளைக் கோத்திரத்தின் மூலம் இவருக்கு தந்தை வழி சகோதரியாக இருந்தார். அதற்கு முன் இவர் நல்ல மனிதராகத் தான் இருந்தார். ஆயினும், குல அவமதிப்பு அவரை தூண்டிவிட்டது. அவர் ஸஅத் அவர்களைப் பார்த்து, அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் தவறாகச் சொல்லி விட்டீர்; அந்த நபரை நீர் கொல்லமாட்டீர்; அதற்கான ஆற்றலும் உமக்கு இல்லை. அந்த நபர் உம்முடைய கோத்திரத்தைச் சேர்ந்தவனாயிருந்தால் அவன் கொல்லப்படுவதை நீர் விரும்பமாட்டீர் என்று ஸஅதுக்கெதிராக கூறினார். உடனே உஸைத் பின் ஹுஸைர் எழுந்து நின்றார். இவர்கள், ஸஅத் அவர்களின் தந்தையின் சகோதரர் மகன் ஆவார். அவர்கள் ஸஅத் பின் உபாதா அவர்களிடம், நீர்தான் தவறாகப் பேசினீர். அல்லாஹ்வின் மீதாணையாக! அவனை நாங்கள் கொன்றே தீருவோம்; நீர் ஒரு நயவஞ்சகர் ஆவீர்; நயவஞ்சகர்களின் சார்பாக நீர் வாதிடுகிறீர் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த விஷயத்தில் ஸஹாபிகளுக்கிடையில் சண்டை ஆரம்பித்தது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மேடை மீது நின்று கொண்டிருக்க அவ்ஸ், கஸ்ரஜ் ஆகிய இரண்டு கோத்திரத்தாரும் ஒருவர் மற்றவர் மீது பாய்ந்து சண்டையிடத் தயாராகி விட்டனர். பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்கள் மௌனமாகும் வரை அவர்களை அமைதிப்படுத்தினார்கள். பிறகு தாமும் மௌனமானார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அன்றைய நாள் முழுவதும் நான் அழுது கொண்டிருந்தேன். என் கண்ணீரும் நிற்கவில்லை ; எனக்கு உறக்கமும் வரவில்லை. என் தாய் தந்தையாரும் என் அருகேயிருந்தனர். நானோ இரண்டு இரவுகளும் ஒரு பகலும் அழுதிருந்தேன். என் கண்ணீரும் நிற்கவில்லை ; எனக்கு உறக்கமும் வரவில்லை. எந்த அளவுக்கென்றால், இந்த அழுகை என் ஈரலை பிளந்து விடுமோ என்று நான் எண்ணினேன்.

என் தாய் தந்தையர் என் அருகேயிருக்க நான் அழுது கொண்டிருந்தபோது அன்ஸாரிப் பெண்ணொருத்தி வந்து என்னிடம் உள்ளே வர அனுமதி கேட்டாள். நான் அவளுக்கு அனுமதியளித்தவுடன் என்னுடன் சேர்ந்து அவளும் அழுதபடி அமர்ந்து கொண்டாள். நாங்கள் இவ்வாறு இருந்து கொண்டிருக்கும்போது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்து ஸலாம் கூறிவிட்டு அமர்ந்தார்கள். அவதூறு சொல்லப்பட்ட நாளிலிருந்து அன்னார் என்னருகே அமர்ந்ததில்லை. ஸலாம் கூறிவிட்டு நலம் விசாரித்து விட்டு தூரத்திலிருந்தே சென்று விடுவார்கள். ஒரு மாத காலம் வரை இவ்வாறே நிகழ்ந்தது. என் விஷயத்தில் அன்னாருக்கு (அதுவரை) எந்த வஹீயும் இறங்கவில்லை.

பிறகு, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தஷஹ்ஹுத் கூறி இறைவனைப் புகழ்ந்து விட்டு ஆயிஷாவே! உன்னைக் குறித்து இன்னின்ன விஷயங்கள் என்னை வந்தடைந்துள்ளன. நீ நிரபராதியாக இருந்தால் அல்லாஹ் விரைவில் உன்னை குற்றமற்றவள் என்று அறிவித்து விடுவான்; உன்னிடமிருந்து ஏதேனும் தடுமாற்றம் வெளிப்பட்டிருந்தால் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக்கோரி அவன் பக்கம் திரும்பி விடு! ஏனெனில், அடியான் தன்னுடைய பாவத்தை ஒப்புக் கொண்டு பாவமன்னிப்புக் கோரினால் அல்லாஹ் அவர் பக்கம் கருணையுடன் திரும்புகிறான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தமது பேச்சை முடித்தபோது, அதைக் கேட்டு என்னுடைய கண்ணீர் நின்று போய் விட்டிருந்தது. அதில் ஒரு துளியும் (எஞ்சியிருப்பதாக) நான் உணரவில்லை. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் என்னைக் குறித்து என்ன கூறினார்களோ அதற்கு என் சார்பாக பதில் கூறுங்கள் என்று நான் என் தந்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினேன். அதற்கு என் தந்தை, அல்லாஹ்வின் மீது ஆணையாக!, அல்லாஹ்வின் தூதரிடம் என்ன சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை ; என்ன பதில் கூறுவது? என்று எனக்கு புரியவில்லை என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

நான் என் தாயாரிடம், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதற்கு பதில் கூறுங்கள் என்று கூறினேன். அதற்கு, அல்லாஹ்வின் மீது ஆணையாக! இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு என்ன பதில் கூறுவது என்றே எனக்குத் தெரியவில்லை என்று அதையே என் தாயாரும் கூறினார்கள்.

பிறகு நானே (பதில்) கூறினேன்; நானோ வயது குறைந்த இளம் பெண் ஆவேன்; திருக்குர்ஆனை அதிகம் தெரியாதவளும் ஆவேன்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! இச்செய்தியை நீங்கள் கேட்டிருக்கின்றீர்கள் ; அது உங்கள் உள்ளங்களில் பதிந்து விட்டது; நான் தீயவளாக இருப்பேனோ என்று எண்ணம் தோன்றி விட்டது; அதை உண்மையென்று நீங்கள் நம்பி விட்டீர்கள் என்பதை அறிவேன். எனவே நான் குற்றமற்றவள் என்று உங்களிடம் சொன்னால் நீங்கள் அதை நம்பப் போவதில்லை ; நீங்கள் கூறிய ஏதேனும் விஷயத்தை நான் ஒப்புக் கொண்டால் - நான் அதை ஒருபோதும் செய்யவில்லை ; நான் குற்றமற்றவள் என்பது அல்லாஹ்வுக்குத் தெரியும் - என்னை நம்பி விடுவீர்கள். இவர் குற்றம் இழைத்திருக்கிறாள்; இவள் தவ்பா செய்கிறாள் என்று கூறுவீர்கள்.

அல்லாஹ்வின் மீதாணையாக! எனக்கும் உங்களுக்கும் யூஸுஃப் (அலை) அவர்களின் தந்தையை உவமையைக் கருதுகிறேன். அதாவது, என்னிடம் யூஸுஃப் (அலை) அவர்களின் தந்தையின் உதாரணம் மட்டுமே உள்ளது.

فَصَبْرٌ جَمِيْلٌ وَاللّٰهُ
الْمُسْتَعَانُ عَلٰى مَا تَصِفُوْنَ

பொருள்: இப்பொழுது நன்கு பொறுமையினை மேற்கொள்வதே எனக்கேற்றதாகும். நீங்கள் கூறுபவற்றிலிருந்து அல்லாஹ்வின் உதவியையே தேட வேண்டும். அவனிடம்தான் உதவி கேட்கப்படும்.

நான் அப்போது குற்றமற்றவள் என்பதை அல்லாஹ் அறிவான்; அல்லாஹ் நான் குற்றமற்றவள் என நிச்சயம் அறிவிப்பான் என்ற நம்பிக்கையுடன் நான் என் படுக்கையில் திரும்பிப் படுத்துக் கொண்டேன்.

அல்லாஹ்வின் மீதாணையாக! என் விஷயத்தில் ஓதப்படுகின்ற வஹீயை அல்லாஹ் அருளுவான் என்று நான் நினைத்துக் கூட பார்த்திருக்கவில்லை. அல்லாஹ் என் தொடர்பாக ஏதேனும் பேசுகிற அளவிற்கு எனக்கு எந்த தகுதியும் இல்லை என்பதே என்னைக் குறித்த எனது கருத்தாக இருந்தது. எனினும், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஏதேனும் கனவு காண்பார்கள்; அதன் மூலமாக அல்லாஹ் என்னை குற்றமற்றவளாக ஆக்குவான் என்றே எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

நான் குற்றமற்றவள் என்பதை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் கூறுவான் என்ற உறுதி எனக்கு இருந்தது. ஆனால், திருக்குர்ஆனுடைய வசனம் இறங்கி விடும் என்று எனக்கு தெரியாது.

கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! இறைத் தூதர் (ஸல்) அவர்கள், தாம் அமர்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்திருக்கவில்லை ; வீட்டார் எவரும் வெளியே செல்லவில்லை; அதற்குள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் மீது வஹீ இறங்கியது. கடுமையான சிரம நிலை அன்னாருக்கு ஏற்பட்டது. அன்னாருடைய மேனியிருந்து முத்துகளைப் போன்று வியர்வைத் துளிகள் வழியத் தொடங்கின. அது குளிர் காலமாக இருந்தது. ஆனால், அன்னார் மீது இறங்கிய இறையறிவிப்பின் சுமையின் காரணமாக அன்னாருக்கு வியர்த்தது.

ஸீரத் இப்னு ஹஷ்ஷாமில் வருகிறது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னாரின் மீது போர்வை சுற்றப்பட்டது. அன்னாருடைய அருளுக்குரிய தலைக்கு கீழே தோளினால் ஆன தலையணை வைக்கப்பட்டது. இதை நான் கண்டபோது கொஞ்சம் கூட பயப்படவில்லை. ஏனெனில், நான் குற்றமற்றவள் என்று நான் அறிவேன்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: வஹீ இறங்குகிறது என்று எனக்கு தெரியவந்தபோது, எனக்கு எவ்வித பதட்டமும் ஏற்படவில்லை. ஏனெனில் நான் குற்றமற்றவள் என்று எனக்கு தெரியும். அது வஹீயாக இருந்தாலும் அல்லாஹ் என்னை குற்றமற்றவளாகவே ஆக்குவான். அல்லாஹ் என் மீது அநீதியிழைக்க மாட்டான்; என்னுடைய பெற்றோர்களைப் பொறுத்த வரை - ஆயிஷாவுடைய உயிர் எந்த இறைவனின் கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக! - பெருமானார் (ஸல்) அவர்கள் மீது வஹீயுடைய நிலை மாறுவதற்குள் என் பெற்றோர்கள் இருவரின் உயிர் வெளியே வந்து விடுமோ என்று எனக்கு தோன்றியது. என் தாய் தந்தையர் இருவரும் பயந்து போய் இருந்தனர். மக்கள் என்ன பேசுகிறார்களோ அதற்கு பொருத்தமாக இறைவன் ஏதேனும் வசனம் இறக்கி விடக் கூடாதே ; அவ்விஷயம் உண்மையாக ஆகிவிடக் கூடாதே என்று அஞ்சிக் கொண்டிருந்தனர். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அந்த நிலை மாறியபோது அன்னார் அமர்ந்து கொண்டு நெற்றியில் இருந்த வியர்வையை துடைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அந்த நிலை அல்லாஹ்வின் தூதரை விட்டு விலகியவுடன் அவர்கள் சிரித்துக் கொண்டே பேசிய முதல் வார்த்தையாக, ஆயிஷாவே! அல்லாஹ் உன்னை குற்றமற்றவள் என அறிவித்து விட்டான் என்று கூறினார்கள். உடனே என் தாயார் என்னிடம் அல்லாஹ்வின் தூதரிடம் எழுந்து செல்! என்று கூறினார்கள். அதற்கு நான் மாட்டேன்;

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்களிடம் செல்ல மாட்டேன். அல்லாஹ்வை மட்டுமே புகழ்ந்து அவனுக்கே நன்றி செலுத்துவேன் என்றேன். (அப்போது) அல்லாஹ்.

اِنَّ الَّذِيْنَ جَآءُوْ بِالْاِفْكِ

எனும் வசனத்தை இறக்கியிருந்தான். பொருள்: அவதூறு கற்பித்தவர்கள் உங்களில் ஒரு குழுவினர் தாம். இவை முழுவதும் பத்து வசனங்களாகும். சூரா நூர் உடைய . 12 முதல் 21 வரையிலான வசனங்கள். ஆகும். அல்லாஹ் குற்றமற்ற நிலையை தெளிவுபடுத்தியவாறு இவற்றை இறக்கியிருந்தான். மிஸ்தஹ் பின் உறவினராக இருந்த காரணத்தினால் அவருடைய வறுமையின் காரணமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவருக்காக செலவு செய்து வந்தார்கள். மிஸ்தஹூம் அவதூறு சுமத்தியவர்களுள் ஒருவராக இருந்தார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஆயிஷா குறித்து (அவதூறு) கூறிய பின்பு ஒருபோதும் மிஸ்தஹுக்காக நான் சிறிதும் செலவிட மாட்டேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது அல்லாஹ்,

وَلَا يَأْتَلِ أُولُوا الْفَضْلِ مِنْكُمْ وَالسَّعَةِ

எனும் வசனத்தை இறக்கினான். அதாவது உங்களில் செல்வம் மற்றும் தயாள குணம் படைத்தோர் சத்தியம் செய்ய வேண்டாம்.

غَفُوْرٌ رَّحِيْمٌ

அல்லாஹ் மிக்க மன்னிப்போனும், மேன்மேலும் கருணைகாட்டுபவனுமாவான் எனும் வசனம் வரை இறங்கியது.

முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் செலவு செய்ய மாட்டேன் என்று சத்தியம் செய்தார்கள். பிறகு இந்த வசனம் இறங்கியதற்கு அவர்கள், ஆம், அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் எனக்கு மன்னிப்பளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன் என்று கூறிவிட்டு, மிஸ்தஹ் அவர்களுக்காக ஏற்கனவே தாம் செலவிட்டு வந்ததைத் திரும்பவும் தொடரலானார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவருக்கு ஒருபோதும் நான் நிறுத்த மாட்டேன் என்றும் கூறினார்கள்.

ஆக, இதுதான் அவதூறு சுமத்தப்பட்ட சம்பவத்தின் சிறிய விவரம்; மற்றவற்றை நான் இனிவரும் காலத்தில் எடுத்துக் கூறுவேன்.இன்ஷா அல்லாஹ்!

இன்று நான் மீண்டும் துஆவின் பக்கம் நினைவூட்ட விரும்புகிறேன். வங்கதேசத்தின் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் நிலைமையையும் வெகு விரைவில் மேம்படுத்துவானாக! பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள்; அல்லாஹ் இவர்களின் நிலை மீதும் கருணை காட்டுவானாக! முஸ்லிம் நாடுகளுக்காகவும், அவர்களின் தலைவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்க வேண்டும் என்பதற்காகவும், மேலும் அவர்கள் பொதுமக்களுடைய உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆக வேண்டும் என்பதற்காகவும் அநீதி இழைக்கக் கூடியவர்களாக ஆகக் கூடாது என்பதற்காகவும் துஆ செய்யுங்கள். ஏனெனில், இவர்களின் அநீதியின் காரணமாகவே எதிரிகளுக்கும் துணிவு பிறக்கிறது. முஸ்லிம்கள் மீது அநீதி இழைத்துக் கொண்டே செல்லலாம்; ஏனெனில், இவர்களே உரிமையை செலுத்தாதவர்களாக இருக்கும்போது நம்மிடமிருந்து எவ்வாறு உரிமையை கேட்பார்கள் என்று அவர்களுக்கு தெரிந்துள்ளது. முஸ்லிம் சமுதாயத்தின் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**1-ம் பக்கத் தொடர்ச்சி (தஃப்ஸீரே கபீர்)......**

சராசரி விலை 25 ரூபாய் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அந்நிலையில் ஒரு கோடியே இருபத்தி ஐந்து லட்சம் ரூபாயில் ஆடுகள் பலியிடப்படும். பின்னர் ஒட்டகங்கள் போன்றவையும் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் சேர்த்து ஒரு மதிப்பீட்டின் படி இரண்டு கோடி ரூபாய் இந்த குர்பானிகளுக்கு செலவாகின்றது. ஆக, இந்தத் தொகை குர்பானிகளில் வீணடிக்கப்படுகின்றன ; இதற்குப் பகரமாக அரேபியர்களின் தர்ப்பியத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இருக்க வேண்டும் ; மேலும் மக்கா, மதீனாவில் கல்லூரிகள் மற்றும் பள்ளிக் கூடங்கள் திறக்கப்படவேண்டும் என்று ஆட்சேபனை செய்கின்றனர். நான் எப்போதும் இவர்களுக்கு இந்த பதிலை கொடுக்கின்றேன். அதாவது சிலமுறை சமுதாயத்தின் மீது எப்படிப்பட்ட நேரங்கள் வந்து விடுகின்றன என்றால், அவர்களுக்கு எப்படிப்பட்ட தியாகங்கள் செய்ய நேரிடுகின்றது என்றால், அவை வெளிப்படையில் பயனற்றதாக தென்படும். ஆனால் அதுபோன்ற தியாகங்களுக்கான பயிற்சிக்காகவே இஸ்லாம் இந்தத் தொடரை தொடங்கியுள்ளது. ஏனெனில், அதுபோன்ற சந்தர்ப்பங்களில் எந்தவொரு நுட்பமான ஞானமும் அவர்களுக்கு தென்பட்டாலும், தென்படாவிட்டாலும் அவர்கள் தியாகங்கள் செய்து கொண்டே செல்ல வேண்டும்.

உதாரணமாக, ஒரு நாட்டில் ஏதாவது தனியான முஸ்லிம் இருக்கின்றார்; மேலும் அங்குள்ள அரசாங்கம் மார்க்கத்திற்கு எதிராக ஏதாவது அநீதியான கட்டளை வழங்கினால், மேலும் அதன் மூலம் அவர்கள் இஸ்லாத்தை அழிக்க விரும்பினால் பின்னர் அதுபோன்ற சூழ்நிலையில் குர்பானிக்கான எந்தப் பயனும் இல்லையென்றால், பின்னர் நான் ஏன் என்னை நானே தியாகம் செய்ய வேண்டும் என்று அவர் இஸ்லாமியப் போதனைக்கு ஏற்ப கூறமாட்டார். மாறாக அவர் உடனடியாக குர்பானிக்காக தன்னைத் தானே சமர்ப்பித்து விடுவார். ஏனெனில், அவர் தன்னைத் தானே தியாகம் செய்யாத வரை மற்றவர்களின் உள்ளங்களில் தியாகத்திற்கான உணர்வு உருவாக முடியாது.

அவர் தூக்கில் தொங்க விடப்பட்டால் பின்னர் வேறொரு நபரும் தூக்கு மேடையில் ஏறுவதற்கு தயாராகி விடுவார்.இரண்டாம் நபர் தூக்கிலிடப்பட்டால் பின்னர் மூன்றாம் நபர் புறப்பட்டு விடுவார்; மேலும் இவ்வாறு ஒவ்வோர் அடியிலும் முழு சமுதாயத்திலும் எப்படிப்பட்ட உத்வேகம் உருவாகி விடும் என்றால், அவர்கள் இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காக பித்துப் பிடித்தவர்களைப் போன்று தியாகங்கள் செய்வதற்காக புறப்பட்டு விடுவார்கள். மேலும் குஃப்ர் (எனும் நிராகரிப்பு) தோல்வியை சந்திக்கும் நிர்பந்தத்திற்கு ஆளாகி விடும். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் புனித மக்காவில் வாதம் செய்த போது அந்நேரத்தில் ஸஹாபா பெருமக்கள் பெரும் தியாகங்களை செய்தனர். அது வெளிப்படையில் பயனற்றதாகவும், விளைவுகளற்றதாகவும் தென்பட்டது. ஆயினும், இந்த தியாகங்களின் விளைவாகவே மக்கா வெற்றிக் கொள்ளப்பட்டது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 43, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * *

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

## (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் ஜெர்மனி சுற்றுப் பயணம் - 2012

### ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் MTA ஜெர்மனியின் ஊழியர்களின் சந்திப்பு

**டிசம்பர் 16 2012 ஞாயிற்றுக்கிழமை**

**எம்.டி.ஏ ஜெர்மனி அல்லது எந்தவொரு நாட்டின் எம்.டி.ஏ அமைப்பும் எம்.டி.ஏ இன்டர்நேஷனலுடைய ஒரு கிளையே ஆகும். மேலும் அது மேலிடத்திலிருந்து கிடைக்கக் கூடிய வழிகாட்டல்களுக்கு கட்டுப்பட்டவையாகும். மேலும் அது எம்.டி.ஏவிற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிமுறையின்படி நடப்பதற்கு கட்டுப்பட்டவை ஆகும்**

**எனவே இங்குள்ள எம்.டி.ஏ குழுவிற்கு எல்லாவற்றையும் விட முதன்மையான விஷயம் இதுவாகும். அதாவது, அவர்கள் என்னென்ன நிகழ்ச்சிகளை உருவாக்கின்றார்களோ அவற்றின் பட்டியலை எனக்கு அனுப்ப வேண்டும். அதாவது இன்ன இன்ன நிகழ்ச்சிகள் இருக்கின்றன ; இதன் கருத்து இதுவாகும்; மேலும் அதன் ஸ்கிரிப்ட் இதுவாகும்; இதனை இவ்வாறு சமர்ப்பிக்கப்படும்; மேலும் இந்த நிகழ்ச்சியில் இன்ன இன்ன நபர்கள் கலந்து கொள்வர்; அதாவது குழந்தைகள் இருப்பர்; பெண்கள் இருப்பர் போன்ற விஷயங்கள் அதில் இடம் பெற்றிருக்க வேண்டும்**

**எந்த நிகழ்ச்சிகள் உள்ளூர் சேனல்களில் ஒளிபரப்பாகின்றனவோ அவற்றை குறித்தும் முன்னரே திட்டம் வகுக்கப்பட்டு விடும்; எனவே அந்த நிகழ்ச்சிகளைக் குறித்தும் கூறவேண்டும். அப்போதுதான் அந்த விவகாரத்தில் ஏதாவது வழிகாட்டல் கொடுக்க வேண்டியது இருந்தால், ஏதாவது க்ன்ழ்ங்ஞ்ற்ண்ஸ்ங் கொடுக்க வேண்டியது இருந்தால், ஏதாவது ஆலோசனை கொடுக்க வேண்டியது இருந்தால் உங்களுக்கு வழங்க முடியும்**

**நான் பலமுறை உதாரணங்கள் கொடுத்து விட்டேன். பிஸ்கட் விற்பனை செய்யக் கூடிய கம்பெனிகள் இருக்கின்றன. அவை பிஸ்கட் தயாரிக்க தொடங்குகின்றபோது, எந்த அளவிற்கு விளம்பரம் கொடுக்கின்றன என்றால் அதற்கு எல்லையே இல்லை. அதன் பிறகு தான் பிஸ்கட் விற்பனையைத் தொடங்குகின்றன. எனவே நாம் எம்.டி.ஏ அல்லது வேறு எதனை உலகிற்கு கொடுக்க விரும்புகின்றோமோ அதற்காக முதலில் இந்த நிகழ்ச்சி வருகின்றது; இன்ன இடத்தில், இன்ன நேரத்தில் நிகழ்ச்சி வருகின்றது; அதன் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று உலகிற்கு கூற வேண்டும்**

நிகழ்ச்சிநிரலுக்கேற்ப பிற்பகலில் எம்.டி.ஏ ஜெர்மனியின் ஊழியர்கள் ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்திக்கும் நற்பேறு பெற்றார்கள். ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த நிகழ்ச்சிக்காக 5.25 மணிக்கு வருகை தந்தார்கள். திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி துவங்கியது. மதிப்பிற்குரிய ஃபாத்திஹ் அஹ்மத் ஸாஹிப் திலாவத் ஓதினார்கள். அதன் பிறகு அதன் உருது மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மத் ஸாஹிப் ஷாஹித் அவர்களும், ஜெர்மன் மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய ஸல்மான் ஸாஹிப் அவர்களும் படித்துக் காட்டினார்கள். அதன் பிறகு ஜெர்மனி அமீர் ஸாஹிப் அவர்கள் சுருக்கமாக தனது உரையை நிகழ்த்தினார்கள்.

ஜெர்மனி அமீர் ஸாஹிப் ஜெர்மனி எம்.டி.ஏ வைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறினார்கள்:

ஜெர்மனி எம்.டி.ஏ வை எம்.டி.ஏ இன்டர்நேஷனல் லண்டன், யூ.கேவின் ஒரு குழந்தை என்றோ அல்லது ஒரு சகோதரன் என்றோ நம்மால் கூறமுடியும். மேலும் அமீர் ஸாஹிப் அவர்கள் சுருக்கமாக எம்.டி.ஏ தொடர்பான சில விஷயங்களை குறிப்பிட்டார்கள்.

ஜெர்மனி அமீர் ஸாஹிப் அவர்களின் சுருக்கமான இந்த உரைக்குப் பிறகு மதிப்பிற்குரிய முஸஃபர் அஹ்மத் ஸாஹிப் நேஷனல் செகரட்டரி ஸம்ஈ வ பஷரீ மற்றும் இன்சார்ஜ் எம்.டி.ஏ இன்டர்நேஷனல் (ஜெர்மனி ஸ்டூடியோஸ்) அவர்கள் சுருக்கமாக தமது அறிக்கையை சமர்ப்பித்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

ஜெர்மன் எம்.டி.ஏ ஸ்டூடியோஸிற்கு தமக்கு சொந்தமான இரண்டு ஜமாஅத் ஸ்டூடியோக்கள் இருக்கின்றன. ஒன்று, முபஷ்ஷீர் ஸ்டூடியோஸ் ஃபிராங்க்ஃபர்ட், மற்றொன்று மஸ்ரூர் ஸ்டூடியோஸ் கூலோன். மஸ்ரூர் ஸ்டூடியோ விரிவுபடுத்தப்பட்டு புத்தம் புதிய Renovation- மற்கு பிறகு அதனை ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மே மாதம் 2011-ம் ஆண்டு திறந்து வைத்தார்கள்.

Open TV - channels உடைய நபர்களின் ஒத்துழைப்பின் மூலமாக நிறுவப்பட்டுள்ள புரோடக்ஷன் சென்டர்களின் எண்ணிக்கை ஆறு ஆகும். தயாரிப்பு மற்றும் பயிற்சி கட்டத்தில் இருக்கும் புதிய புரோடக்ஷன் சென்டர்களின் எண்ணிக்கை 20 ஆகும்.

எம்.டி.ஏ ஜெர்மனியின் கீழ் தயாராகக் கூடிய தொடர்களின் மொத்த எண்ணிக்கை 18 ஆகும். ஒவ்வொரு மாதமும் சுமார் 10 மணிநேர நிகழ்ச்சிகள் தயார் செய்யப்படுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் தயார் செய்யப்பட்ட ஆவணப் படங்களின் எண்ணிக்கை 9 ஆகும்.

நேஷனல் செகரட்டரி ஸம்ஈ மற்றும் பஷரீ கூறினார்கள்:

இந்த முழு அமைப்பையும் கன்ட்ரோல் செய்வதற்காக ஒரு தலைமையக மேனேஜ்மென்ட் போர்ட் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில் மொத்தம் 16 துறைகள் இருக்கின்றன.

எம்.டி.ஏ இன்டர்நேஷனலுடைய நான்கு பல்வேறுவகையான டிஸ்டிரிபூஷன் சேனல்கள் இருக்கின்றன. அதில் முதன்மையானது எம்.டி.ஏ 2-ல் ஒளிப்பரப்பாகக் கூடிய ஜெர்மன் சர்வீஸ் ஆகும். எம்.டி.ஏ 2-ல் ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேர ஜெர்மன் சர்வீஸ் ஒளிப்பரப்பாகின்றது. அதில் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. இவ்வாறு மாதத்தில் 22 மணிநேர ஜெர்மன் நிகழ்ச்சிகள் லண்டன் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இது மட்டுமின்றி ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஒப்புதலுடன் எம்.டி.ஏ (ஜெர்மன் ஸ்டூடியோ) தனது Youtube சேனலை துவங்கியுள்ளது. தற்போது அந்த சேனலின் மொத்த கிளிக்ஸ்களின் எண்ணிக்கை ஐந்து லட்சத்திற்கும் கூடுதலாக அதிகரித்து விட்டது. Subscribe செய்த நபர்களின் எண்ணிக்கை சுமார் 800 ஆகிவிட்டது. ஹுஸுர் அன்வர் அவர்களின் ஒப்புதலுடன் 24 மணிநேர நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. மேலும் அது மறு ஒளிபரப்பு செய்யப்படுகின்றது. இந்த webstream ஐ அனைத்து மொபைல் டிவைஸ்களிலும் காண முடியும். இது மட்டுமின்றி, ஜெர்மனியில் உள்ள மற்ற ஒபன் டிவி சேனல்களில் எம்.டி.ஏ ஜெர்மன் ஸ்டூடியோவில் தயார் செய்யப்பட்ட நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்ப முடியும். அதுபோன்ற ஒபன் டிவி சேனல்களின் எண்ணிக்கை 30 ஆகும்.

செகரட்டரி ஸம்ஈ மற்றும் பஷரீ ஸாஹிப் கூறினார்கள்:

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஏப்ரல் மாதம் 2011-ம் ஆண்டு எம்.டி.ஏ இன்டர்நேஷனல் மாநாட்டின் சந்தர்ப்பத்தின்போது இவ்வாறு கூறியிருந்தார்கள்:

ஒரு புதிய உத்வேகம் மற்றும் உணர்வு எல்லா மட்டத்திலும் தென்பட வேண்டும். கேமராமேன் இருக்கின்றார்; புரோடக்ஷன் செய்யக் கூடிய நபர்கள் இருக்கின்றனர்; கிராஃபிக்ஸ் துறையினர் இருக்கின்றனர்; பல்வேறு துறைசார்ந்த மக்கள் இருக்கின்றனர்; டெலிவிஷனுடன் தொடர்புடைய ஒவ்வொரு துறையினரையும் தேடுங்கள்; அஹ்மதிகளில் இளைஞர்களை

தேடுங்கள்; மேலும் நபர்கள் கிடைத்து விடுவர். பின்னர் புத்தம் புதிதாக, புத்துணர்வுடன் அந்தக் குழுவை பெருக்கிக் கொண்டே செல்லுங்கள். மேலும் புது புது நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த வழிகாட்டுதலை கருத்தில் கொண்டவாறு தொலைதூரத்தில் எம்.டி.ஏவிற்காக புதிய புரோடக்ஷன் குழுக்களை உருவாக்குவதற்கு ஸம்ஈ மற்றும் பஷரீ துறை முயன்று கொண்டிருக்கின்றது. குறிப்பாக, ஜெர்மனியில் அரசாங்க நிர்வாகத்தின் கீழ் இயங்கக் கூடிய ஓபன் டி.வி சேனல்களின் சிறிய மண்டல டெலிவிஷன் சென்டர்கள் இருக்கின்றன. அவற்றின் வசதிகளை கருத்தில் கொண்டவாறு எந்த நகரங்களில் இந்த ஓபன் டிவி சேனல்கள் இருக்கின்றனவோ அங்கு இந்தத் துறையானது அங்குள்ள ஜமாஅத்துகளுக்கு எம்.டி.ஏ குழுக்களை தயார் செய்வதன் பக்கம் கவனமூட்டிக் கொண்டிருக்கின்றது.

எனினும், ஒவ்வொரு ஜமாஅத்தும் தனது எம்.டி.ஏ குழுவினை தனியாக உருவாக்குவது அவசியமாகும். அப்போது தான் அங்குள்ள ஜமாஅத் செயல்பாடுகளை அந்தக் குழு சுயமே உருவாக்க முடியும். இன்னும் கூறப்போனால், நிகழ்ச்சிகளை தயார் செய்வதில் தலைமையகக் குழுவினருக்கு உதவி செய்ய முடியும். இதன் மூலம் நிகழ்ச்சிகளின் தயாரிப்பில் மட்டும் உதவியாக இருக்காது; மாறாக, அனைத்து ஜமாஅத்களிலும் எப்படிப்பட்ட சூழல் உருவாக முடியும் என்றால், அங்கு டெலிவிஷன் புரோடக்ஷனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளுக்கும் தேவையான திறன்கள் சுயமாகவே இளைஞர்களிடம் தோன்றிவிடும். இந்த நோக்கத்திற்காக ஸம்ஈ வ பஷரீ துறை தனது சுற்றுப் பயணத்தின்போது ஹுஸூர் அன்வர் அவர்களின் இந்த வழிகாட்டல்களை ஜமாஅத் உறுப்பினர்களுக்கு முன்னால் எடுத்து வைக்கின்றது. அதன் பிறகு முறையாக இரண்டு நாள் செயல் பயிற்சியையும் கொடுக்கின்றது. இந்த பயிற்சி முகாம்களில் எடிட்டிங், இன்டர்வியூவ் எடுப்பது, கேமரா வொர்க், ஸ்கிரிப்ட் தயாரிப்பது, குரல் டப் செய்வது, நிகழ்ச்சியை நடத்துவது, மற்றும் இதர ஏராளமான விஷயங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. கடந்த ஓர் ஆண்டில் இதுபோன்ற சுமார் 22 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

இதன் பிறகு எம்.டி.ஏ ஜெர்மனி ஸ்டூடியோக்களின் பல்வேறு வகையான சில Clip-கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

**ஜெர்மனி எம்.டி.ஏ ஊழியர்களுக்கு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டல்கள்:**

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று ஓதிய பிறகு கூறினார்கள்:

ஜெர்மனி அமீர் ஸாஹிப் அவர்கள் தமது உரையில், எம்.டி.ஏ ஜெர்மனியை எம்.டி.ஏ இன்டர்நேஷனலுடைய இளைய சகோதரன் அல்லது குழந்தை என்று கூறினார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

முதல் விஷயம் இதுவாகும். அதாவது, அது இளைய சகோதரனும் கிடையாது; குழந்தையும் கிடையாது. நாம் இளைஞர்களாக ஆகிக் கொண்டிருக்கின்றோம்; எனவே சிறிது கிளர்ச்சியான நடைமுறையை கைகொள்ளலாம் என்று குழந்தைகளுக்கும் கூட எண்ணம் வந்து விடுகின்றது. தற்போது நாம் முதிர்ச்சியடைந்து விட்டோம்; நாம் சுதந்திரமானவர்கள் ஆவோம் என்று சகோதரர்களுக்கும் எண்ணம் வந்து விடுகின்றது. எனவே எம்.டி.ஏ ஜெர்மனி அல்லது எந்தவொரு நாட்டின் எம்.டி.ஏ அமைப்பும் எம்.டி.ஏ இன்டர்நேஷனலுடைய ஒரு கிளையே ஆகும். மேலும் அவை மேலிடத்திலிருந்து கிடைக்கக் கூடிய வழிகாட்டல்களுக்கு கட்டுப்பட்டவையாகும். மேலும் எம்.டி.ஏவிற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிமுறையின்படி நடப்பதற்கு அவை கட்டுப்பட்டவை ஆகும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

பல்வேறு நேரங்களில் வழங்கப்படுகின்ற வழிகாட்டல்களை இங்கு ஜெர்மனியில் இருக்கும் மக்களுக்கு சேர்மன் ஸாஹிப் எம்.டி.ஏ இன்டர்நேஷனல் அனுப்பிக் கொண்டிருக்கின்றாரா? இல்லையா? என்று எனக்கு தெரியவில்லை. நான் எம்.டி.ஏ ஜெர்மன் சேலை பார்ப்பதில்லை. ஏனெனில் புரிவதில்லை.எனவே இங்குள்ள எம்.டி.ஏ குழுவிற்கு எல்லாவற்றையும் விட முதன்மையான விஷயம் இதுவாகும். அதாவது, அவர்கள் என்னென்ன நிகழ்ச்சிகளை உருவாக்கின்றார்களோ அவற்றின் பட்டியலை எனக்கு அனுப்ப வேண்டும். அதாவது இன்ன இன்ன நிகழ்ச்சிகள் இருக்கின்றன ; இதன் கருத்து இதுவாகும்; மேலும் அதன் ஸ்கிரிப்ட் இதுவாகும்; இதனை இவ்வாறு சமர்ப்பிக்கப்படும்; மேலும் இந்த நிகழ்ச்சியில் இன்ன இன்ன நபர்கள் கலந்து கொள்வர்; அதாவது குழந்தைகள் இருப்பர்; பெண்கள் இருப்பர் போன்ற விஷயங்கள் அதில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இந்த வழிகாட்டல் அங்கு யூ.கேவிலும் வழங்கப்பட்டுள்ளது. அதாவது, இன்டர்நேஷனல் எம்.டி.ஏவில் தினமும் என்ன நிகழ்ச்சிகள் எல்லாம் வருகின்றனவோ அல்லது அவர்களுக்கு என்னவெல்லாம் Schedule தயாரிக்கப்படுகின்றதோ அவற்றை எனக்கு அனுப்புகின்றார்கள்; அதனை நான் பார்க்கின்றேன். இதில் ஜெர்மனியின் பகுதியும் இருக்கின்றது. ஆனால், அதில் எந்த விளக்கங்களும் இருப்பதில்லை. எனவே அறிந்து கொள்ள முடிவதில்லை.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: நீங்கள் தற்போது கிளிப்ஸ்களில் பார்த்தது போன்று, எந்த ஸ்டூடியோக்கள் தற்போது தமது நிகழ்ச்சிகளை தாமே தயாரித்துக் கொள்ளும் அளவிற்கு mature ஆகிவிட்டார்களோ அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்றால், அவர்கள் மாதாந்திர அறிக்கையை அனுப்ப வேண்டும். அதாவது அடுத்த மாதம் நாங்கள் இன்ன இன்ன நிகழ்ச்சிகள் செய்ய இருக்கின்றோம்; அவற்றை நாங்கள் எம்.டி.ஏ இன்டர்நேஷனலிற்கு televise செய்வதற்காக அனுப்பியுள்ளோம் ; மேலும் இன்ன இன்ன நிகழ்ச்சிகள் எங்களுடைய ஸ்டுடியோக்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன என்ற விவரங்கள் அதில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், இங்கு கட்டப்பட்டுள்ள உங்களுடைய ஸ்டூடியோக்கள் இருக்கின்றனவே அவற்றின் நிகழ்ச்சிகள் இங்கு televise செய்யப்படுகின்றனவா? என்று வினவினார்கள்.

அதற்கு, எங்களது ஸ்டூடியோக்களில் என்னென்ன நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்படுகின்றனவோ அவற்றை நாங்கள் எம்.டி.ஏ இன்டர்நேஷனலிற்கு அனுப்பி வைக்கின்றோம்; சில நிகழ்ச்சிகள் உள்ளூர் சேனல்களிலும் ஒளிபரப்பப்படுகின்றன என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சமூகத்தில் கூறப்பட்டது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எந்த நிகழ்ச்சிகள் உள்ளூர் சேனல்களில் ஒளிபரப்பாகின்றனவோ அவற்றை குறித்தும் முன்னரே திட்டம் வகுக்கப்பட்டு விடும்; எனவே அந்த நிகழ்ச்சிகளைக் குறித்தும் கூறவேண்டும். அப்போதுதான் அந்த விவகாரத்தில் ஏதாவது வழிகாட்டல் கொடுக்க வேண்டியது இருந்தால், ஏதாவது directive கொடுக்க வேண்டியது இருந்தால், ஏதாவது ஆலோசனை கொடுக்க வேண்டியது இருந்தால் உங்களுக்கு வழங்க முடியும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எம்.டி.ஏ இன்டர்நேஷனலில் ஜெர்மனிக்கு அதிகபட்சமாக தினமும் ஒரு மணிநேரம் கொடுக்க முடியும். ஒரு மணிநேரத்திலோ உங்களுடைய எல்லா நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்ப முடியாது. தற்போது நீங்கள் ஒளிபரப்பிய கிளிப்ஸ்களில் எத்தனை நிகழ்ச்சிகள் எம்.டி.ஏவில் காட்டியிருக்கின்றீர்கள்?

அவற்றில் சில நிகழ்ச்சிகள் காட்டப்பட்டுள்ளன என்று ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சமூகத்தில் கூறப்பட்டது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

அடுத்ததாக, பெண்களுக்காக தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகள் தொடர்பாக என்னுடைய standing வழிகாட்டல் என்னவென்றால், பெண்கள் close up ஆக

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)



காட்டப்படக் கூடாது. இங்குள்ள உங்கள் கேமரா மேனிற்கு அதற்கான கட்டளை கொடுக்கப்பட வேண்டும். நீங்கள் எனக்கு காட்டிய நிகழ்ச்சிகளில் அல்லது நீங்கள் காட்டிய clips களில் குறைந்தபட்சம் close up பதிவுகள் இடம்பெறவில்லை. ஆனால், ஒருசில இடங்களில் வந்துவிட்டன. நான் அஹ்மதி பெண்களைக் குறித்து கூறிக் கொண்டிருக்கின்றேன். ஏனெனில், அஹ்மதிப் பெண்களைப் பொறுத்தவரை அவர்களோ தம்மை பர்தாவில் வைக்கின்றனர். பெண்கள் அல்லது குழந்தைகளுக்காக ஒளிப்பதிவு செய்யப்படும் நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அவற்றில் எந்த அளவிற்கு இடைவெளி இருக்க வேண்டும் என்றால், நிகழ்ச்சி நடப்பது தெரிய வேண்டும் அதேநேரம் முகங்கள் முற்றிலும் தெளிவாக காட்டப்படும் வகையில் கிளோஸ் அப் இருக்கக் கூடாது. நீங்கள் பார்த்திருப்பீர்கள்; முதலில் அங்கு யூ.கேவில், அப்படிப்பட்ட சில நிகழ்ச்சிகள் வந்து கொண்டிருந்தன. ஆனால், தற்போது அவை நீக்கப்பட்டு விட்டன. வயோதிகப் பெண்மணிகள் கலந்து கொள்ளக் கூடிய சில நிகழ்ச்சிகளைத் தவிர்த்து மற்றவை நீக்கப்பட்டு விட்டன. அதில் real talk நிகழ்ச்சி இருக்கின்றது. மேலும் வேறு சில நிகழ்ச்சிகளும் இருக்கின்றன. மேலும் அவர்களோ எப்படிப்பட்ட வயதுடையவர்களாக இருக்கின்றனர் என்றால், அல்லாஹ் அவர்களுக்கு பர்தா விவகாரத்தில் relaxation வழங்கி விடுகின்றான். ஆனால், எவ்வாறு இருப்பினும், பெண் பிள்ளைகளின் நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அவற்றில் அதிக closeup காட்சிப் பதிவுகள் இடம் பெறவே கூடாது. கேமராமேன் கேமராவிலிருந்து capture செய்து கொண்டிருக்கும்போது அல்லது filming செய்து கொண்டிருக்கும்போது அவர்கள் இந்த விஷயங்களை குறித்துக் கொள்ள வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எவ்வளவு நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றனவோ அவை televise செய்யப்பட வேண்டும்; தற்போது காட்டப்பட்ட நிகழ்ச்சிகளின் கிளிப்கள் நல்ல, தரமானவையாக எனக்கு தென்பட்டன. ஆயினும், இவை எம்.டி.ஏ இன்டர்நேஷனலில் வந்ததை நான் கண்டதில்லை. ஒருவேளை வரவில்லை என்றால், மேலும் உங்களது பார்வையில் தரமானவை என்றால் பின்னர் நீங்கள் மீண்டும், மீண்டும் எம்.டி.ஏ இன்டர்நேஷனலிற்கு நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் இங்குள்ள அஹ்மதி அன்பர்களும் அந்த நிகழ்ச்சிகளை பார்க்க முடியும். மேலும் அதற்காக announcement -ம் செய்யப்பட வேண்டும். அதாவது இன்ன நாளில் இன்ன இன்ன நிகழ்ச்சிகள் காட்டப்படும் என்று அறிவிப்பு செய்ய வேண்டும். எந்த நேரத்தில் என்ன நிகழ்ச்சி வருகின்றது? என்று இங்கு ஜெர்மனியில் வசிக்கக் கூடியவர்களுக்கும், ஜெர்மன் மொழியைப் புரியக்கூடியவர்களுக்கும், மேலும் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் வசிக்கக் கூடிய மக்களுக்கும் தெரிவதே இல்லை. ஆனால் உள்ளபடியே சில தரமான நிகழ்ச்சிகளும் இருக்கின்றன. மேலும் அவற்றிற்கான தேவையும் உள்ளது. எனவே அதற்கு ஒவ்வோர் அஹ்மதியின் கவனத்திற்கும் இந்த நிகழ்ச்சிகள் தெரிய வரவேண்டும்.


ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இதேபோன்று இதனையும் பார்க்க வேண்டும்; அதாவது குத்பாக்கள் இருக்கின்றன ; அல்லது தலைமையக நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அவை எந்த அளவிற்கு ஜெர்மன் நிகழ்ச்சிகளில் இடம் பெறச் செய்யப்படுகின்றன? மேலும் அவை மொழியாக்கம் செய்து எந்த அளவிற்கு காட்டப்படுகின்றன? என்றும் பார்க்க வேண்டும். ஆக, அல்லாஹ்வின் அருளினால் அதிகமான நிகழ்ச்சிகளை நீங்கள் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், எனது கருத்து இதுவாகும். அதாவது அவை பார்க்கப்படுவதில்லை. அதற்கான காரணம் என்னவென்றால், முறையாக அதற்கான அறிவிப்புகள் செய்யப்படுவதில்லை ; முன்னரே விளம்பரம் கொடுக்கப்படுவதில்லை. ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குப் பிறகு ஒரு நிகழ்ச்சி வருகின்றது என்றால், பின்னர் நிரந்தரமாக இந்தக் காலகட்டத்தில் இன்ன நேரத்தில் இன்ன ஜெர்மன் நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் ; மேலும் அது இன்ன வயதுடைய மக்களுடன் தொடர்புடையதாகும் என்ற அறிவிப்பு செய்யப்படுதல் வேண்டும்.

பிள்ளைகளின் நிகழ்ச்சிகள் தொடர்பாக ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு எம்.டி.ஏ இன்டர்நேஷனல் குழுவினருடன் எந்த அளவிற்கு co-ordination இருக்க வேண்டும் என்றால், குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள் இன்ன நாளில் ஒளிபரப்பாகும் என்பது உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் இன்ன இன்ன நிகழ்ச்சிகள் வருகின்றன என்பது பிள்ளைகளுக்கு தெரிய வரும். இந்த co ordination இல்லையென்றால், பின்னர் எனது கவனத்திற்கு அது கொண்டுவரப்பட வேண்டும். haphazardly தாம் விரும்பியதை நினைத்த நாளில் நிகழ்ச்சிகளை போட்டுக் கொள்ளலாம் என்பது கூடாது. அல்லது எம்.டி.ஏ இன்டர்நேஷனலுக்கு ஒரு ஷெட்யூலில் ஸ்லாட் கிடைக்கும்போது அல்லது ஒரு நாளில் வேறு எந்த நிகழ்ச்சியும் இல்லை ; எனவே இன்று இதனை ஒளிபரப்பி விடலாம் என்பதும் கூடாது. இது சரியாதனல்ல. மாறாக முறையாக ஒரு திட்டம் இருக்க வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உங்களை எம்.டி.ஏ இன்டர்நேஷனலுடைய குழந்தையாக கருதிக் கொண்டு co-ordination செய்தாலும் சரி; அல்லது சகோதரனாக கருதி co-ordination செய்தாலும் சரி; அல்லது கிளையாக கருதி செய்தாலும் சரியே ; ஆனால் எவ்வாறு இருப்பினும், எதுவரை உங்களுக்குள் பரஸ்பரம் co-ordination இருக்காதோ அதுவரை இந்த நிகழ்ச்சிகளினால் எந்தப் பயனும் இருக்காது. அதாவது இந்த நிகழ்ச்சிகள் அவ்வளவு fruitful ஆக இருக்க முடியாது. எந்த அளவிற்கு ...ஆங்கிலம் இருக்கவேண்டுமோ அந்த அளவிற்கு இருக்காது. ஒரு முறையான திட்டத்துடன் சனிக்கிழமை ஜெர்மன் நேரத்திற்கேற்ப இன்ன நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் ; ஞாயிற்றுக் கிழமையன்று இன்ன நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்; திங்கட்கிழமையன்று இன்ன நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் ; செவ்வாய்கிழமையன்று இன்ன நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் என்று ஒரு முறையான திட்டம் இருக்க வேண்டும்; எனவே இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தமது இன்டர்ஸ்க்கு ஏற்ப பார்க்க முடியும். மேலும் அதற்கேற்ப நீங்கள் ஷெட்யூலிங் செய்யுங்கள். நிகழ்ச்சிகளை improve செய்வதற்கு இதுவே வழிமுறையாகும். இல்லையென்றால் அதனால் எந்தப் பயனும் இருக்காது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எப்போதாவது சர்வே எடுத்தால், இங்குள்ள இளைய தலைமுறைகள் அதாவது இங்கே வளர்ந்து ஆளாகிக் கொண்டிருப்பவர்களில் பத்து சதவிகிதம் பேர் கூட எம்.டி.ஏவில் ஜெர்மன் நிகழ்ச்சிகளை பார்ப்பார்கள் என்று நான் கருதுவதில்லை. பல்வேறு நியூஸ் சேனல்களும் கூட தங்களது நிகழ்ச்சிகளைக் குறித்து சர்வே எடுக்கின்றனர். அங்கு யூ.கேவிலும் கூட ஒரு நிகழ்ச்சியைக் குறித்து சிலநேரம் நான் எம்.டி.ஏவினருடன் கூறுகின்றேன்: அதாவது பல்வேறு நாடுகளிலிருந்து டேட்டா எடுத்து அந்த நிகழ்ச்சியை எத்தனை மக்கள் பார்த்துள்ளனர் என்று எனக்கு கூறுங்கள் எனக் கூறுகின்றேன். மேலும் உலகின் பல்வேறு நாடுகளில் எவை எவை பிரைம் டைம் நேரங்கள் ஆகும்? மேலும் எந்த நேரத்தில் உங்களது நிகழ்ச்சி ஒளிபரப்பாக வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள்? என்பதை எனக்கு கூறுங்கள். எனவே இந்த அடிப்படையிலும் ஒரு முறையான திட்டம் இருக்க வேண்டும். மேலும் உருது, ஆங்கிலம் மற்றும் ஃபிரஞ்ச் மொழி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன. ஏனெனில் இந்த மொழிகள் உலகில் அதிகமாகப் பேசப்படுகின்றன. ஆனால், ஜெர்மன் மொழியுடைய நிகழ்ச்சிகளைக் குறித்தும் எந்தெந்த நிகழ்ச்சிகள் வரவேண்டும் என்ற முறையான திட்டமிடல் இருக்க வேண்டும். மேலும் அவற்றில் பின்னர் இன்ன இன்ன நிகழ்ச்சிகள் வந்தன ; அவற்றை எத்தனைப் நபர்கள் பார்த்தனர் என்ற ஃபீட்பேக்கையும் பெற வேண்டும். இத்தனை மக்கள் விரும்பினர்; மேலும் அதனை மேம்படுத்துவதற்காக இன்ன இன்ன ஆலோசனைகளை வழங்கியுள்ளனர் என்ற ஃபீட்பேக்கையும் பெற வேண்டும். ஒரு நிகழ்ச்சிக் குறித்து ஃபீட்பேக் வராத வரை உங்களுடைய நிகழ்ச்சிகளை எப்படி மேம்படுத்த வேண்டும் என்பது உங்களுக்கு தெரியாது. உங்களது பார்வையில் மிகவும் நல்ல நிகழ்ச்சியாக இருக்கும்; ஆனால் அது மக்களின் இயல்பிற்கு ஏற்றவாறு இருந்ததா? இல்லையா? என்பது தெரியாது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கென்று ஓர் இயல்பு இருக்கின்றது; அதனை முழு உலகிலும்



நிலை பெறச் செய்வதில் எம்.டி.ஏவிற்கும் ஒரு பங்கு உள்ளது. அவர் ஃபிரஞ்ச் பேசக் கூடியவராக இருக்கலாம்; உருது பேசக் கூடியவராக இருக்கலாம்; ஆங்கிலம் பேசக் கூடியவராக இருக்கலாம்; அரபி பேசக் கூடியவராக இருக்கலாம்; அல்லது ஜெர்மன் பேசக் கூடியவராக இருக்கலாம்; அந்த இயல்பை நிலைபெறச் செய்ய வேண்டும். அதற்காக நமது நிகழ்ச்சிகளில் ஒரு uniformity இருக்க வேண்டும். அது தர்பிய்யத் ரீதியிலும் எல்லா இடங்களிலும் தென்பட வேண்டும். அதில் எம்.டி.ஏ தனது பங்களிப்பை வழங்க வேண்டும். இதுவே அதன் அசல் நோக்கம் ஆகும். தப்லீஃக் ரீதியில் சில நாடுகளில் சில விஷயங்கள் பல்வேறு வகையானவையாக இருக்கின்றன. ஆனால், தர்பிய்யத் அடிப்படையில் ஒற்றை இயல்பை உருவாக்க வேண்டியதற்கு அவசியம் உள்ளது. மேலும் அதில் எம்.டி.ஏ ஒரு மாபெரும் பங்களிப்பை வழங்க முடியும். இதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எத்தனை ஜெர்மன் நிகழ்ச்சிகள் எம்.டி.ஏ வில் காட்டப்பட்டன? ஒருவேளை காட்டப்பட்டன என்றால் அதைக் குறித்து இங்குள்ள viewers உடைய கருத்து என்ன? எந்த வயது நபர்களுக்கு எந்த வகையான நிகழ்ச்சிகள் இருக்கின்றன? பின்னர் குழந்தைகளுக்கு புரிய வைப்பதற்காகவும், கற்றுக் கொடுப்பதற்காகவும், அறிவை வழங்குவதற்காகவும் என்னென்ன நிகழ்ச்சிகள் தயாரிக்க வேண்டும்? என்ற விவரங்கள் உங்களிடத்தில் இல்லை. அடுத்து, ஒரு நிகழ்ச்சி தயாராகிவிட்டது; ஆனால் ஆறு மாதம் வரை எந்த நிகழ்ச்சியும் வரவில்லை என்ற நிலை கூடாது. அவ்வாறிருந்தால் பின்னர் அதனால் எந்தப் பயனும் கிடையாது. நாம் இங்குள்ள புதிய தலைமுறையினரை, குழந்தைகளை பாதுகாக்க வேண்டும். இளைஞர்களையும் பாதுகாக்க வேண்டும். பெரியவர்களுக்காகவும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆக ஒவ்வோர் இயல்பு படைத்தவருக்கு ஏற்பவும் நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும். நாள் அறிந்திருக்க வேண்டும்; நேரம் அறிந்திருக்க வேண்டும்; மேலும் அவற்றில் ஆர்வத்தை உருவாக்குவதற்காக தொடர்ந்து முறையாக ஜமாஅத்துகளின் மூலம் அறிவிப்பு செய்யப்படுதல் வேண்டும். இந்த ரூட் லெவல் வரை நமது ஜமாஅத் மற்றும் கிளை அமைப்புகளில் ஒரு நிர்வாகம் இருக்கின்றது. ஒருவேளை இந்த அமைப்பிற்கு மத்தியிலும் இந்த ரூட் லெவல் வரை இந்த மாதத்தின் ஜெர்மன் நிகழ்ச்சி ஷெட்யூல் தயாரகி இருக்கின்றது; இன்ன இன்ன நேரத்தில் இன்ன நிகழ்ச்சிகள் வரும் என்ற விஷயம் சென்றடையவில்லை என்றால் பின்னர் அவற்றின் பக்கம் மக்கள் கவனம் செலுத்த மாட்டார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எம்.டி.ஏ வின் பக்கம் கவனம் உருவாகி விட்டால் பின்னர் நேரத்தை வீணடிப்பதற்காகவும் அல்லது ஒழுக்கத்தை அழிப்பதற்காகவும் பார்க்கப்படுகின்ற உள்ளூர் சேனல்களின் பக்கம் மக்களின் கவனம் குறைந்து கொண்டே சென்று விடும். எவ்வாறு இருப்பினும், இன்ன நிகழ்ச்சிகள் பார்க்கக் கூடாது என்று நாம் நமது பிள்ளைகளை தடுக்கின்றபோது பின்னர் அந்த தரத்திற்கு ஏற்ப அந்த நிகழ்ச்சிக்கு மாற்றாக வேறு நிகழ்ச்சி கொடுப்பதும் நமது கடமையாகும். அதற்கு மாற்றாக வேறு நிகழ்ச்சியை நாம் கொடுக்கவில்லையென்றால் பின்னர் நாம் ஒரு frustrationஐ உருவாக்கிக் கொண்டிருப்போம். எனவே இந்த அடிப்படையில் மிகவும் முயற்சி செய்வதற்கு அவசியம் உள்ளது. மேலும் கவனம் செலுத்துவதற்கு அவசியம் உள்ளது. ஓர் உழைப்பிற்கான தேவை உள்ளது. மாஷா அல்லாஹ் உங்களுக்கோ இவ்வளவு டீம் உள்ளது. முழு உலகிலும் பரவியுள்ளது. சிறிது பணி செய்யக் கூடியவர்கள் இருக்கின்றனர். சில தயாரிப்பாளர்கள் இருக்கின்றனர். சில கேமராமேன்கள் இருக்கின்றனர். சிலர் இங்கு பணி செய்கின்றனர். சிலர் பல்வேறு இடங்களில் பணி செய்கின்றனர். இவ்வாறு ஒவ்வோர் இடத்திலும் உங்களுடைய பப்ளிஸிட்டிக்காக ஒரு டீம் உள்ளூர் அளவிலும் இருக்க வேண்டும். எங்கெங்கு எல்லாம் ஜமாஅத் இருக்கின்றதோ அங்கு அந்த நிகழ்ச்சிகளை பார்த்ததற்குப் பிறகு மக்களின் கருத்துகள் என்ன? என்ற ஃபீட்பேக்கை அவர்கள் பெற வேண்டும். மேலும்,எத்தனை சதவிகித மக்கள் நிகழ்ச்சிகளை பார்க்கின்றனர்? என்பதையும் பார்க்க வேண்டும். ஆக, இந்த சில விஷயங்களையே நான் கூற எண்ணியிருந்தேன்.

இதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நண்பர்கள் யாருக்காவது ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால் அவர்கள் கேட்கலாம் என்று

இதன் பிறகு ஒரு நண்பர், ஜெர்மனியில் எம்.டி.ஏ 2 லைவ்ஸ்டிரீம் நடைபெறுவதில்லை என்று கேட்டார்.

அதற்கு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: மேலிடத்திற்கு இதனை தெரிவிப்பது உங்களுடைய பணியாகும். லைவ்ஸ்டிரீம் ஏன் வருவதில்லை? என்னென்ன காரணங்கள் இருக்கின்றன? ஏதாவது தொழில்நுட்ப காரணங்கள் இருக்கின்றனவா? ஒளிபரப்பாகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் லைவ்ஸ்டிரீம் செய்யப்படுகின்றது என்பதே எனது எண்ணமாகும். ஒருவேளை எம்.டி.ஏ 2-ற்கு இல்லையென்றால் பின்னர் அதற்கு, உங்களுடைய requiremnt ஐ அனுப்புங்கள்; எங்களுக்கு இதற்கான தேவை இருக்கின்றது என்பதை (எழுதி) அனுப்புங்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஜெர்மன் நிகழ்ச்சிகள் எம்.டி.ஏ வில் வரக் கூடிய உங்களுடைய மாலைவேளை பிரைம்டைம் நேரத்தில் பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியில் இருக்கின்றனரா? அல்லது handy யில் அவற்றை பார்க்கின்றார்களா? பிள்ளைகள் வீட்டில் இருந்து அந்த நிகழ்ச்சிகளை காண வேண்டும். எவவாறு இருப்பினும், லைவ்ஸ்டீரிமுங்கும் செய்தும் பார்த்துக் கொள்வார்கள். எனினும் அதற்கான தொடர் முயற்சிக்கு அவசியம் உள்ளது. பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கும், அவர்கள் எம்.டி.ஏ ஜெர்மன் சேனலில் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கும் கவனமூட்ட வேண்டும். பின்னர் அவற்றின் ஃபீட்பேக்கையும் பெற வேண்டும்.

பின்னர் துருக்கியைச் சேர்ந்த ஜெர்மனியில் வசிக்கும் ஒரு நண்பர், நான் லைவ் துருக்கி நிகழ்ச்சிகளை துவங்கி இருக்கின்றேன்; அதற்காக தங்களிடம் துஆவிற்கு விண்ணப்பிக்கின்றேன் என்று ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சமூகத்தில் கூறினார். அதற்கு, அல்லாஹ் நற்பேறு வழங்குவானாக ; மேலும் நிகழ்ச்சியை வெற்றிகரமாக ஆக்குவானாக என்று ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

ஜெர்மனியில் எம்.டி.ஏ நிகழ்ச்சிகளைப் பற்றி பிரமோஷன் செய்யப்படுவதில்லை என்று ஓர் இளைஞர் கூறினார். நீங்கள் அது குறித்து எவ்வளவு advertise செய்துள்ளீர்கள்? நீங்கள் எப்போதாவது, ஏதாவது லீஃப்லெட்டிங் செய்துள்ளீர்களா? இன்ன நகரத்தில் இன்ன ஃபிரீகென்ஸியில் இன்ன டிஷ்ஷில் இன்ன நேரத்தில் இன்ன நிகழ்ச்சி வரும் என்று எப்போதாவது நீங்கள் ஏதாவது செய்தித்தாளில் விளம்பரம் செய்துள்ளீர்களா? இதுவே ஒரு தொடர் முயற்சியாகும். நீங்கள் தொடர்ந்து உழைக்க வேண்டும் என்று ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நான் பலமுறை உதாரணங்கள் கொடுத்து விட்டேன். பிஸ்கட் விற்பனை செய்யக் கூடிய கம்பெனிகள் இருக்கின்றன. அவை பிஸ்கட் தயாரிக்க தொடங்குகின்றபோது, எந்த அளவிற்கு விளம்பரம் கொடுக்கின்றன என்றால் அதற்கு எல்லையே இல்லை. அதன் பிறகு தான் பிஸ்கட் விற்பனையைத் தொடங்குகின்றன. எனவே நாம் எம்.டி.ஏ அல்லது வேறு எதனை உலகிற்கு கொடுக்க விரும்புகின்றோமோ அதற்காக முதலில் இந்த நிகழ்ச்சி வருகின்றது; இன்ன இடத்தில், இன்ன நேரத்தில் நிகழ்ச்சி வருகின்றது; அதன் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று உலகிற்கு கூற வேண்டும். குத்தாமுல் அஹ்மதியா ஏழரை லட்சம் ஃபிளாயர் கொடுத்திருக்கின்றனர் என்றால் அந்த ஏழரை லட்சம் ஃபிளாயர்களும் மக்களுக்கு சென்றடைந்து விட்டனவா? ஏழரை லட்சம் ஃபிளாயர்களை கொடுத்த பிறகு அமைதியாகி விட்டாமோ? என்று பார்க்க வேண்டும். தற்போது பாருங்கள்: எந்தவொரு கம்பெனியும் விளம்பரம் கொடுக்கின்றபோது ஒருமுறை விளம்பரம் கொடுத்து விட்ட பிறகு அமைதியாகிவிடுவதில்லை. மக்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காக டி.வியில் ஒரு நொடிக்கு, இரண்டு நொடிக்கு விளம்பரம் செய்கின்றனர்; செய்தித்தாள்களில் பல்வேறு நாட்களில் பல்வேறு நேரங்களில் விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே இங்கு பப்ளிக்கிற்கு கவனமூட்டுவதற்காக நீங்கள் நிரந்தரமாக அதனை பப்ளிசிட்டி செய்து வாருங்கள் ; விளம்பரப்படுத்தி வாருங்கள்.

ஹுஸூர் அன்வர்

Proprietor off : 044- 2260 1886

**RAZIK XEROX & TELECOM**

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 19 SEPTEMBER 2024 Issue No.38

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)


(அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்; எந்த அளவிற்கு விளம்பரம் கொடுக்க முடியும்? என்று பார்க்க வேண்டும். எந்த அளவிற்கு அதனை நாம் afford செய்ய முடியும்? என்று பார்க்க வேண்டும். உங்களுடைய பல்வேறு சேனல்கள் அல்லது எந்த பிரைவேட் சேனல்களில் நீங்கள் நிகழ்ச்சிகள் தயாரித்து வழங்குகின்றீர்களோ அந்த சேனல்களின் கீழே script எழுத வேண்டும்; அல்லது அங்கு எம்.டி.ஏ இன்டர்நேஷனல் என்றும் ஒரு சேனல் இருக்கின்றது ; அதில் இஸ்லாத்தைக் குறித்து தொடர்ந்து இன்ன நிகழ்ச்சி வருகின்றது என்று announce செய்ய வேண்டும்; அவ்வாறு செய்தால் மக்களுக்கு கவனம் உருவாகி விடும். நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்யாத வரை எவ்வாறு மக்களுக்கு கவனம் உருவாகும்? எவ்வாறு awarness உருவாகும்? பின்னர் செய்தித்தாள்களில் பல்வேறு நேரங்களில் உங்களுடைய (உள்ளூர்) ஜமாஅத்தைக் குறித்த செய்திகள் கொடுக்கப்படுகின்றன. அப்போது எம்.டி. ஏ தொடர்பாகவும் எழுத வேண்டும். ஆக அதனை பிரமோட் செய்வது இங்கு இருக்கின்ற உள்ளூர் நிர்வாகத்தினரின் பணியாகும். எதனை எப்படி என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் ஆலோசிக்க வேண்டும். ஒரு விஷயத்தை ஒருமுறை எடுத்துக் கொண்டு அமர்ந்து விடுவதால் ஒன்றும் ஆகிவிடாது.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: மக்களின் பேச்சுகளை விட்டு விடுங்கள்.ஒரு மணிநேர எம்.டி.ஏ நிகழ்ச்சிகள் தினமும் வருகின்றன. அதனை எத்தனை percent மக்கள் பார்க்கின்றனர்? என்பதை மட்டும் நீங்கள் ஆய்வு செய்யுங்கள். முதலில் உங்களுக்குள் புரமோட் செய்யுங்கள். பத்து சதவிகித நபர்கள் கூட பார்ப்பார்கள் என்று நான் கருதவில்லை. முதலில் அதனை ஐம்பது percent வரை எட்ட செய்யுங்கள். பின்னர் வெளியில் உள்ள மக்களைக் குறித்து சிந்தியுங்கள். எல்லா மட்டத்திலும், ஒவ்வொரு ஜமாஅத்திலும், செகரட்டரி ஸம்ஈ வ பஸரீ என்ற பொறுப்பில் இருப்பவர்கள் இருக்கின்றனர். தத்தமது வட்டாரங்களில் இதன் பக்கம் கவனமூட்டுவது அவர்களின் பணியாகும். ஒவ்வொரு கிளை அமைப்பின் பணியும் ஆகும். அவர்கள் தத்தமது உறுப்பினர்களுக்கு கவனமூட்ட வேண்டும். நாங்கள் மிகவும் ஆர்கனைஸ்ட் மக்கள் ஆவோம்; எங்களது எல்லா பணிகளும் Systematic ஆகும் ; நாங்கள் எல்லா மட்டத்திலும் பணி செய்கின்றோம் என்பது நமது வாதமாக இருக்கின்றது. வெறும் நாவளவில் கூறிவிடுவதால் உலகத்திற்கு தெரிந்து விடாது. நாம் சுயமே செய்து காட்டாத வரை உலகத்திற்கு தெரிய வராது. எனவே அதற்காக உங்களது பொறுப்பாளர்களுக்கு கவனமூட்டுங்கள். செகரட்டரி ஸம்ஈ வ பஸரீ ஸாஹிப் அமர்ந்திருக்கின்றார். இவர் தமது respective எசெகரட்டரிமார்களுக்கு கவனமூட்ட வேண்டும்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எம்.டி.ஏ வில் லட்சக்கணக்கான பவுண்ட்கள் செலவிடப்படுகின்றன. அவ்வாறிருந்தும் எந்த விளைவும் வெளிப்படவில்லையென்றால் எந்தப் பயனும் கிடையாது. பெரியவர்கள் ஓரளவிற்கு கேட்டு விடுகின்றனர்; பயனடைந்து விடுகின்றனர். ஆனால், இந்த நாடுகளில் வளர்ந்து வருகின்ற இளம் தலைமுறையினர் இருக்கின்றனர்; குழந்தைகள் இருக்கின்றனர்; அல்லது இளைஞர்கள் ஆகிக் கொண்டிருக்கும் பிள்ளைகள் இருக்கின்றனர். ஒன்று, அவர்களுக்காக அவர்களின் இயல்பிற்கு ஏற்றவாறு நிகழ்ச்சிகள் வரவேண்டும்; மேலும் பின்னர் எல்லா மட்டத்திலும், எல்லா வகையான அமைப்புகள் மூலமாகவும் இந்த குறிப்பான நேரத்தில் ஜெர்மன் நிகழ்ச்சிகளையே வீடுகளில் கேட்பதன் பக்கம் கவனமூட்ட வேண்டும்.

யூடியூபிலும் நமது ஒரு சேனல் இருக்கின்றது ; நாங்கள் அதனை மேலும் Optimize செய்ய வேண்டுமா? அல்லது லோக்கல் வீடியோ ஸ்டிரீமிங்கிற்கான sites இருக்கின்றன ; அவற்றின் பக்கம் கவனம் செலுத்த வேண்டுமா? என்று ஓர் இளைஞர் கேட்டார்.

அதற்கு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: சில மக்களிடத்தில் access இல்லை ; இங்கு கேபிள் இருக்கின்றது. மேலும் கேபிளில் நமது எம்.டி.ஏ இல்லை. முதல் விஷயம் என்னவென்றால், கேபிள்காரர்களுடன் பேச வேண்டும். ஏனெனில், கேபிளில் பல்வேறு சேனல்கள் ஒளிபரப்பப்படுகின்றன ; அவற்றில் எந்தெந்த சேனல்கள் ஒளிபரப்பாகி வருகின்றனவோ அந்த சேனல்கள் கேபிள்காரர்களிடமிருந்து ஒரு தொகையை வசூல் செய்கின்றன. எனவே சில பகுதிகளில் எம்.டி.ஏ விற்காக பேச்சுவார்த்தை நடத்தினால், பின்னர் சேனல்களை ஒளிபரப்பக் கூடிய கேபிள் டிஸ்ட்ரிபியூட்டர்கள் கிடைத்து விடுவார்கள். இரண்டாவதாக, யூடியூபில் வருகின்ற நமது நிகழ்ச்சிகள் இருக்கின்றன ; அல்லது ஸ்ட்ரீமிங் மூலமாக வருகின்றன. அவர்கள் ஏன் இதனை தொடங்கி இருக்கின்றார்கள் என்றால் அதிக அதிகமான மக்களுக்கு அந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய access கிடைத்து விட வேண்டும் என்பதற்காக அவர்கள் தொடங்கி இருக்கின்றனர். எனவே எவர்களிடம் டிஷ் இல்லையோ ; அவர்கள் யூடியூபில் பார்த்துக் கொள்ள வேண்டும். தற்போதோ எப்படிப்பட்ட gadgets தயாராகி விட்டன என்றால் அவற்றை நீங்கள் இன்டர்நெட்டுடன் இணைத்து விடுகின்றீர்கள். மேலும் நீங்கள் அந்த நிகழ்ச்சியை இன்டர்நெட்டில் காண முடியும். டெலிவிஷனில் பார்க்க முடியும். எனவே அந்த நிகழ்ச்சியை நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்தீர்கள் என்றால் பின்னர் முழு குடும்பத்தினரும் பார்க்க முடியும்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இன்ன இன்ன நமது நிகழ்ச்சிகள் இருக்கின்றன ; மேலும் அவற்றை காண்பதற்கு இன்ன வழிமுறைகள் இருக்கின்றன என்ற விஷயத்தை எல்லா மட்டத்திலும், எல்லா இடத்திலும் புரோமோட் செய்வதற்கு நமக்கு அவசியம் இருக்கின்றது. நாங்கள் இன்ன விஷயத்தை Optimize செய்வோம் ; மேலும் இன்ன விஷயத்தை விட்டு விடுவோம் என்பது சரியானதல்ல ; சேனலாக இருக்கட்டும் ; அல்லது ஸ்ட்ரீமீங்காக இருக்கட்டும்; யூடியூபாக இருக்கட்டும் ; அல்லது என்ன விஷயமாக இருக்கட்டும்; அதனை நாம் Maximum லெவலில் optimize செய்ய வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் அது அதிக அதிகமான மக்கள் வரை சென்றடைய முடியும்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: தற்போது உதாரணமாக : இங்குள்ள நிலவரம் எனக்கு தெரியாது; ஆனால் யூ.கே உட்பட சில நாடுகளில் அண்டை அயலாரின் ஒப்புதல் கிடைக்காத வரை சில பிளாட்களில் நீங்கள் டிஷ் பொருத்த முடியாது. எனவே அதுபோன்ற இடங்களில் மக்கள் இன்டர்நெட்டில் பார்க்கின்றனர். எல்லா மட்டத்திலும் அதனை எப்படியாவது மக்கள் வரை சென்றடைய செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் ஒவ்வொரு பணியும் தொடங்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் உங்களுடைய உச்சபட்ச முயற்சியை மேற்கொள்ள வேண்டும். **(தொடரும்......)**

( நன்றி : அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் பத்திரிகை - பிப்ரவரி 22 - 28, 2013)
தமிழாக்கம்
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *


**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005


Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad